வாராந்த சஞ்சிகை
பெப்ரவரி 24 - மார்ச் 01, 2016

# சுடர் ஒளி

பக்கம் 24
விலை 30/-



# புதிய ஆளுநர் வடக்கு மக்களின் மனதை வெல்வாரா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளி மூக்குடன் அதிசய பறவை

இரூரில் குரங்கு முகத்துடனும், கிளி மூக்குடனும் கூடிய வெளிநாட்டு அதிசயப் பறவை பிடிபட்டது.

கரூரை அடுத்த மண்மங்கலம் சமத்துவபுரம் பகுதியில் தோட்டத்தில் வித்தியாசமான சத்தம் கேட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு சென்று இளைஞர்கள் பார்த்தபோது குரங்கு முகம் போன்றும், கிளி மூக்கு போன்ற மூக்குடன் அதிசயப் பறவை ஒன்று இருந்துள்ளது. அதனைக் கண்ட அப்பகுதியில் சுற்றி திரியும் நாய்கள் துரத்தியுள்ளது. அவற்றிடமிருந்து பறவையை மீட்ட இளைஞர்கள், தண்ணீர், பழங்கள் கொடுத்து காப்பாற்றினர்.

# டைட்டானிக் ஆந்தை!



டைட்டானிக் படத்தில் வரும் காதல் காட்சி போன்று வானத்தில் பறந்த நிலையில் 'ரொமான்ஸ்' செய்யும் இரு ஆந்தைகளின் படம் இணையங்களில் இப்போது பிரபல்யமாகி உள்ளது.

1997 இல் வெளிவந்த 'டைட்டானிக்' படத்தில் கப்பலின் முகப்பில் 'ரோஸ்' கைகளை விரித்த நிலையில் நிற்க அவளின் பின்னால் இருந்து 'ஜாக்' அணைப்பது போன்ற காட்சி பிரபல்யமானது.

இதேபோன்ற நிலையில் ஆந்தை இறக்கைகளை விரித்துப் பறந்த நிலையில் அதன் இணை பின்னால் பறந்தபோது, தென்னாபிரிக்காவின் 'ஜொகன்னர்ஸ் பேர்க்கில் மார்க் ட்ரைஸ்டாலேவால்' எடுக்கப்பட்ட இந்தப் படமும் அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது.

# பாம்பினுடன் விளையாடும் அதிசய குழந்தைகள்!

அமெரிக்காவில் ஊர்வன விலங்குகள் வளர்ப்பில் அதிக ஆர்வம் கொண்ட தந்தை ஒருவர், அந்த விலங்குகளுடன் தனது குழந்தைகளையும் விளையாடவிட்டு ரசித்துப்பார்த்து வருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வசித்து வரும் எரிக் லெப்லங்க் என்பவர், நூற்றுக்கணக்கான பல்லிகள் மற்றும் பாம்புகளை வளர்த்து வருகிறார். இந்த நிலையில், அங்கு ஏற்பட்ட திடீர் தீ விபத்தால், சில விலங்குகள் இறந்து போனது. மேலும் சில விலங்குகள் காயம் அடைந்தன, இதனால் எஞ்சியிருந்த விலங்கினங்களை தனது வீட்டிற்கு மாறியுள்ளார்.

மேலும், இவரது மூன்று குழந்தைகளும், பள்ளிகள் மற்றும் பாம்புகளுடன் விளையாடு வதற்கு அனுமதித்துள்ளார். இதில் அச்சமூட்டும் விடயமாக 19 அடிகொண்ட 'பைதான்' என்ற விஷமில்லாத மலைப்பாம்புடன் குழந்தைகள் விளையாடுகின்றனர்.



இதுகுறித்து எரிக் லெப்லங்க் கூறுகையில், ஊர்வன விலங்கினங்களை வளர்ப்பது எனது பணி மட்டுமல்லாமல், அது எனது கட்டுக் கடங்கா உணர்ச்சி கொண்ட ஒன்றாகும். நான் எவ்வாறு, இவற்றினை வளர்க்கும்போது அச்சமில்லாமல் தைரியமாக செயல்படு கிறேனோ, அந்த தைரியம் எனது குழந்தை களுக்கும் வரவேண்டும். தங்களுடன் வாழும் ஒரு நபராக அவர்களை இவற்றினை கருத வேண்டும். எனது குழந்தைகளை பாம்புகள் மற்றும் பல்லிகள் கடித்துள்ளன. ஆனால் அவர்கள் நலமுடன் தான் இருக்கிறார்கள்.

எனது மகள் செல்பி, 19 அடியுடைய மலைப்பாம்புடன் தைரியமாக விளையாடுவாள். அது எனது மகளை சுற்றி செல்லும் போது, அதனை எனது மகள் இறுகப்பிடித்துக் கொள்வாள். அந்த பாம்பின் தடித்த தசைகள் அவளுக்கு பிடிக்கும் என்பதால் அதனுடன் தைரியமாக விளையாடுவாள். இதனைப்பார்க் கும் சிலர், இது மிகவும் ஆபத்தான விடயம் என்று கூறுவார்கள். ஆனால், எனது குழந்தைகளுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.

பாம்பு, பல்லி, நாய்களிடம் கடி வாங்கிய எனக்கு அது ஒரு பெரிய ஆபத்தாக தெரிய வில்லை. ஆனால், என் வாழ்வில் நான் சந்தித்த மிகப்பெரிய ஆபத்து எதுவென்றால், மரத்தில் இருந்தது நான் கீழே விழுந்ததுதான். ஆனால் அந்த விபத்தில் கூட எனக்கு பெரிதாக ஒன்றும் நேரவில்லை. விலங்குகளுக்கு மரியாதை செலுத்தினால், அந்த விலங்குகளும் நமக்கு எவ்வித இடையூறும் அளிக்காமல், நம்மோடு நலமாக வாழும் என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிக் கூண்டில் போடப்படும் தட்டிக்கேட்கப்பட முடியாதவர்கள்



- ஆசாத்

இலங்கையில் பௌத்த மதத்துக்கு அரசியலமைப்பினூடாக முதன்மை இடம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அரசியல்வாதிகள் தொட்டு சாதாரண சிங்கள மக்கள் வரை பௌத்த குருமாரை மிக உயர்வான விதத்தில் மதித்து வருகின்றனர். சிங்களக் கிராமப்புறங்களில் பௌத்த குருமாரின் கட்டளைகளைச் சிங்கள மக்கள் தெய்வ வாக்காகவே கருதி ஏற்றுக் கொள்வதுண்டு.

இந்த நன்மதிப்பை அடிப்படையாகக் கொண்டு பல பௌத்த பிக்குகளிலும் அவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்புகளும் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி வந்தனர். இலங்கையில் இடம்பெற்ற தமிழ் மக்களைப் பல்லாயிரக் கணக்காகக் கொன்று குவித்து, சொத்துக்களைச் சூறையாடிய இனக்கலவரங்களில் இவர்கள் முன்னணியில் நின்று செயற்பட்டதை நாம் மறந்து விட முடியாது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் முகமாக உருவாக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தை பிக்குகளே கிழித்தெறிய வைத்தனர். சிங்கள மக்களின் பேராதரவைப் பெற்ற முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ ஆர்.டி பண்டாரநாயக்காவைச் சுட்டுக்கொன்றதில் களனி பௌத்த மத பீடமும், புத்த பிக்குகளும் பங்கு கொண்டிருந்தனர்.

ஒட்டுமொத்தத்தில் புத்த பகவானின் அன்பு, கருணை, கொல்லாமை, சகிப்புத்தன்மை, மது அருந்தாமை போன்ற அரிய கொள்கைகளை ஒரு புறம் போதித்தவாறே மறுபுறம் அவற்றுக்கு எதிராக நடப்பவர்களாகவே பல பௌத்த பிக்குகள் செயற்பட்டனர்.

இப்படியாக தனியாட்களாகவும், குழுக்களாகவும் இனவாத இனக்குரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட புத்தபிக்குகள், ஜாதிக ஹெல உறுமய என்ற பேரில் அரசியல் கட்சியை உருவாக்கினர். இது தமிழ் மக்களுக்கு எதிராக இனக்குரோத பிரச்சாரங்களை மேற்கொண்டதுடன் இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற கொள்கையையும் கொண்டிருந்தது. இலங்கை பௌத்த சிங்களவர்களுக்கு உரிய நாடு என்றும், ஏனையவர்கள் அவர்களைச் சார்ந்து வாழ வேண்டியவர்கள் எனவும் சிங்கள மக்கள் மத்தியில் வலுவான கருத்தை உருவாக்கும் வகையில் அது தீவிரமாகச் செயற்பட்டு வந்தது.

எனினும் இவர்கள் தட்டிக் கேட்க ஆளற்ற வகையில் கொட்டமடித்து வந்தனர். இந்த நிலையில் தான் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் கலகொட அத்த ஞானசேரர் தலைமையில் பொதுபலசேன ஆரம்பிக்கப்பட்டது. முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு வன்முறைச் சக்தியாக கட்டி வளர்க்கப்பட்டது. சட்டம், நீதி என்பன கூட இவர்களைக் கண்டு வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டன.



அதேவேளையில் ராவணபலய, சிஹல ராவய போன்ற பிக்குகளின் அமைப்புக்களும் இனவாத வன்முறை அமைப்புகளாக பொதுபலசேனவுக்குத் துணையாக மஹிந்த அரசின் ஆதரவில் வளர்ந்தன.

மசூதிகள் மீது தாக்குதல்கள், முஸ்லிம் வர்த்தக நிலையங்களைத் தாக்குதல், முஸ்லிம்களின் கலாசார பழக்கவழக்கங்களுக்கு எதிராக வன்முறைப் பிரயோகம் என இவர்கள் சகல விதமான சட்ட விரோத நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இவர்களுக்கு எதிராக பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பும் கூட இவர்கள் தட்டிக் கேட்கப்பட முடியாதவர்களாக அட்டகாசம் புரிந்து வந்தனர்.

அவற்றின் தொடர்ச்சியாகத் தான் ஞானசார தேரர் ஹோமாகம நீதிமன்றில் ஊடகவியலாளர் பிரகீத் அவர்களின் மனைவியை மிரட்டியதுடன், நீதிமன்றுக்குள்ளும் குழப்பம் விளைவித்தார். வழமை போல சட்டம் தன்னை நெருங்காது என்றே அவர் எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனால் நீதிபதி ரங்கா திசநாயக்கா அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு பொலிஸாருக்குக் கட்டளையிட்டார். நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். அதை எதிர்த்து ராவணபலய,சிஹெல ராவய ஆகிய அமைப்பினர் குழப்பங்களை ஏற்படுத்தினர். பின்பு அவர்களும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலுக்கு அனுப்பப்பட்டு விட்டனர்.

இப்போது தட்டிக் கேட்கப்பட முடியாதவர்கள் எனக் கருதப்பட்ட ஞானசாரதேரர், சட்டதிஸ்ஸ தேரர், அச்சிமன தயானந்த தேரர் ஆகியோருடன் மேலும் 11 பேர் குட்டிக் கூண்டில் போடப்பட்டு விட்டனர்.

நீதிமன்றத்தில் குழப்பங்களை

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாதா தாவூத் இப்ராஹிம்

சண். சரவணக்குமார்

பதிலடியாக தாவூத்திற்கு பணம், மற்ற பொருட்கள் கொடுத்து உதவும் பல்வேறு நபர்களை கொன்றான் அருண் காவ்லி. சோட்டா ராஜன் அருண் காவ்லியின் ஆட்களை ஈவு இரக்கமில்லாமல் கொலை செய்தான். இப்படியே இரண்டு பக்கமும் தலைகள் உருண்டன. நடக்கும் சம்பவங்களை காவல்துறை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தது. உச்சகட்டமாக அருண் காவ்லியின் அண்ணன் பாபா காவ்லியை தாவூத்தின் ஆள் சுட்டுக்கொலை செய்தான். இதனால் அருண் காவ்லிக்கு ஆலோசனை சொல்ல யாருமில்லை. அருண் காவ்லியின் எல்லாமுமாக இருந்த அத்தனை பேரையும் சுட்டுக்கொன்று குவித்தான் சோட்டா ராஜன்.

நிலை தடுமாறிப்போன அருண் காவ்லி அவனது ஆட்கள் மூலம் பிரபல ஹோட்டலில் இருந்த தாவூத்தின் மைத்துனர் பார்க்கரையும் அவனது உதவியாளரையும் ஹோட்டல் வாசலில் வைத்து சுட்டுகொன்றான். இந்த சம்பவத்தை செய்தது சைலேஷ், பிபின், சந்தோஷ், ராஜீ படாலா என்கிற நான்கு நபர்கள் என்பதை தெரிந்துகொண்ட தாவூத், அவர்களை தூக்கி வரசொல்லி கட்டளை போட்டான். ஆனால் அவர்களை பிடிக்கமுடியவில்லை. அந்த நான்கு நபர்களும் ஒரே இடத்தில் தங்காமல் வேறு வேறு இடங்களுக்கு நாடோடிகள் போல ஓடிக்கொண்டே இருந்தனர். தாவூத்தும் அந்த சம்பவத்தை மறக்கும்படியாக பல்வேறு வேலைகளில் மூழ்கிவிட்டான். அதனால் அவர்களின் வாழ்நாள் நீண்டு கொண்டே சென்றது. இதற்குள் இரண்டு மாதங்கள் ஓடின.

தாவூத் வைத்த குறியிலிருந்து தப்பிவிட்டார்கள் என்பதால் அந்த நான்கு நபர்களும் பேமஸ் பிரபலமடைந்தார்கள். இதனால் பல்வேறு கொலை சம்பவங்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. விறுவிறுவென அவர்கள் அடுத்த கட்டத்திற்கு வளர்ந்து இருந்தனர்.

ஒரு கொலையை செய்துவிட்டு அங்கிருந்து தப்பித்து போகும்பொழுது அடிபட்டு இரண்டு நபர்கள் மட்டும் கீழே விழுந்தனர். அவர்களை பற்றி தெரியாத அந்த பகுதி மக்கள் அவர்கள் இருவரையும் பிடித்து அடித்துத் துவைத்து காவல்துறையினரிடம் கொடுத்தனர். அதற்கு பிறகுதான் தெரிந்தது அவர்கள் யார் என்கிற விஷயம். இந்த விஷயம் தாவூத்தின் காதுகளுக்கு போனது. அந்த சமயம் சோட்டா ராஜன் மும்பை நடிகை ஒருத்தியோடு பிரபல ஹோட்டலில் தங்கி இருந்தான். கொடுத்த வேலையை சரியாக செய்யவில்லை என்று சோட்டா ராஜன் மீது இந்த முறை தாவூத் வருத்தப்பட்டான்.

சிக்கிய இருவரும் பொது மக்கள் அடித்தால் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தனர். எப்படியும் தாவூத் ஆட்கள் தங்களை கொலை செய்ய வருவார்கள் என்று அவர்கள் நம்பினர். காவல்துறைக்கும் அந்த எண்ணம் இருந்தது.

அதனால் அந்த மருத்துவமனையின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு இருந்தது. இந்த முறை தாவூத் ஒரு வேலையை செய்தான். தனது தங்கையின் கணவனை கொன்றவர்களை பழி வாங்க வேறு நபர்களை அனுப்பினான்.




சோட்டா ராஜன் உயிருடன் இருப்பதால் தாவூத்துக்கு நிம்மதி இல்லை. கடந்த பத்து நாள்களில் தாவூத்தின் அண்டர் வேல்ட் பிசினஸ்கள், மும்பை பங்குச்சந்தை நிலவரத்தைப்போல ஆட்டம் காண ஆரம்பித்துள்ளன. இந்த ஆண்டின் இறுதிக்குள் எப்படியும் தாவூத்தை பிடித்து விட வேண்டும் என்று இந்திய உளவுத்துறை பல்வேறு வேலைகளை கையில் எடுத்து செய்து வருகிறது. அதன் பின்னணிதான் சோட்டா ராஜன் டெல்லி கொண்டு வரப்பட்டதும், அதையொட்டி நடக்கும் விஷயங்களும்!

தாவூத்தை பிடித்து இந்தியா கொண்டு வரவேண்டும் என்று உளவுத்துறை நினைப்பதைப்போலவே சோட்டா ராஜன் கதையையும் முடித்து விடவேண்டும் என்று தாவூத்தின் தரப்பு பல்வேறு வேலைகளை பார்த்து வருகிறது.

மும்பை, டெல்லி, பெங்களூர், கொச்சின், விசாகப்பட்டினம், பீகார் என்று பல்வேறு இடங்களில் தாவூத்தின் ஆட்கள் கழுகுகளாய் வலம் வருகிறார்களாம் இந்திய உளவுத்துறையின் பிடியில் இருக்கும் சோட்டா ராஜனைத் தூக்குவதற்கு. இதில் இரண்டு அரசியல் பேசப்பட்டு வருகிறது. ஒன்று தாவூத்திற்கு இது தன்மானப்பிரச்சனை, மற்றொன்று தாவூத்தின் மும்பை நிழல் உலகத்தை யார் நிர்வாகம் செய்வது என்பது போன்ற இரண்டு அரசியல் விசயங்கள் இருப்பதால், சோட்டா ராஜனின் தலைக்கு மேல் கத்தி தொங்குவது போல, தாவூத்தின் ஆட்களின் துப்பாக்கிகள் எப்பொழுதும் சோட்டா ராஜனின் நெற்றியினைக் குறிபார்த்து பார்த்துக்கொண்டே இருக்கிறது.

அதனால்தான் சோட்டா ராஜனுக்கு டெல்லியில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் ஐந்தடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு, அவனது இருப்பிடம் மிக பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருக்கிறது. அங்கு இருக்கும் பொலிஸ் அதிகாரிகளில் கூட ஒரு சிலரைத் தவிர, வேறு யாரும் சோட்டா ராஜனை நெருங்க முடியாது.

இதற்கு இடையில் தாவூத்தின் இந்திய வழித்தொழில்கள் அனைத்தும் முடக்கப்பட்டு உள்ளன.

அதோடு தாவூத்தின் வீட்டிற்கு பாதுகாப்பு கொடுப்பது ஐ.எஸ் அமைப்பு என்பது உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்கள் அடங்கிய கோப்புகளை கைகளில் வைத்துக்கொண்டு வளைகுடா நாடுகள், கிழக்கு ஆசிய நாடுகள் என்று பல்வேறு உலக நாடுகளில் தாவூத்தின் கட்டுமான தொழில்கள், ஷாப்பிங் மால்கள், எரிபொருள் நிறுவன முதலீடுகள், மற்றும் ஆயுதம் விற்பது போன்ற முக்கியமான 'அண்டர்கிரவுண்ட்' வேலைகளின் பங்குகளை அந்நாட்டின் அரசுகளோடு பேசி, தாவூத்தை முடக்கும் வேலைகளை இந்திய உளவுத்துறை செய்து வருகிறது.

பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணங்கள் வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருகிறதோ என்னவோ தாவூத் விசயத்தில் பயங்கரமாக வேலை செய்கிறது.

இதற்கெல்லாம் சோட்டா ராஜன்தான் காரணம் என்று சோட்டா ராஜனை காலி செய்யும் அனைத்து வேலைகளையும் கனக் கச்சிதமாக செய்து வருவதோடு, தனக்கு எதிராக விரிக்கப்பட்ட வலைகளை தன் 'உலக' அரசியல் செல்வாக்கால் கொஞ்சம் கொஞ்சமாக அறுத்தெறிந்து விட்டு யாரும் தனக்கு தடை போட முடியாது என்று விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது தாவூத்தின் 'டி' கம்பெனி.

இதற்கு இடையில் சோட்டா ராஜனை இந்தியா கொண்டு வந்தபோது அவனை தூக்கும் வேலையை, தாவூத்தின் தளபதியாக வலம் வரும் சோட்டா ஷகீலிடம் கொடுக்கப்பட்டது. சோட்டா ஷகீல் பத்துக்கும் மேற்பட்ட குழுவிடம் வேலைகளைப் பிரித்து கொடுத்துவிட்டு காத்துக்கொண்டிருந்தான். இந்த நிலையில்தான் அந்தக் குழுவின் சையத் நியாமத் என்கிற முக்கிய நபர் இப்பொழுது பெங்களூரில் பொலிஸில் சிக்கி, விசாரணை நடந்து வருகிறது. சையத் நியாமத் சோட்டா ராஜனைக் குறிவைத்து காத்திருந்த நபர்களுள் முக்கியமான நபர் என்று பேசப்பட்டு வருகிறது.

சோட்டா ஷகீலுக்கும் - சோட்டா ராஜனுக்கும் இடையேயான விரிசல், தாவூத்திடம் இருவரும் வேலை பார்த்த காலத்திலேயே தொடங்கி விட்டது. ஆரம்பத்தில் ஷகீலும்- ராஜனும் நல்ல நெருக்கத்தில்தான் இருந்தார்கள். தாவூத்தின் குரூப்பில் ராஜனுக்கு எதிராக யார் செயல்பட்டாலும் உடனே அதை ராஜனுக்கு தெரியப்படுத்துவது ஷகீல்தான்.

பின்னாளில் அந்த நெருக்கம் சௌத்யா என்பவனால் முறிவானது. சௌத்யாவும் தாவூத்தின் நெருங்கிய வட்டாரங்களில் ஒருவன்தான். சோட்டா ராஜனுக்கு அடுத்த இடத்தில் இருந்தவன். ராஜனை காலி செய்து அந்த இடத்திற்கு சௌத்யா வருவதிற்கு ஷகீலை பயன்படுத்தினான்.

அதனால் சோட்டா ராஜனைப் பற்றி சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் தாவூத்திடம் போட்டுக் கொடுத்து வந்தான் சௌத்யா. சோட்டா ராஜன் அவனுக்காக ஆட்களை வளர்த்துக்கொண்டு, டி கம்பெனி நிழலில் செழிப்பாக வளர்வதாக புகார் கூறினான். தாவூத் நம்பவே இல்லை. ஆனால் தாவூத்தின் தங்கை கணவர் இப்ராஹிம் பார்க்கர் கொலைக்கு பழி வாங்காமல் காலம் கடத்தியதால் தாவூத், சோட்டா ராஜன் மீது முதல் முறையாக கோபப்பட்டான்.

(தோட்டக்கள் பாயும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதுதான் மனிதம்

**பி**றந்து சில மாதங்களே ஆன ஆண் குழந்தை ஒன்றை, நைஜீரியா நாட்டில் தன்னந்தனியே விட்டுவிட்டார்கள் பெற்றோர். இச்சிறுவன் பட்டினியால் இறக்கவேண்டும் என்பதே அவர்கள் எண்ணமாக இருந்துள்ளது. காரணம், இந்தச் சிறுவன் ஒரு அமானுஷ சக்தி என்றும். இவனுக்கு பேய் பிடித்துள்ளதாகவும் பெற்றோர் நம்பியுள்ளார்கள். இது தான் முழுமையான காரணமா தெரியவில்லை.

ஆனால் அல்லும் பகலும் வேகாத வெய்யிலில். உணவு உடை இன்றி இச்சிறுவன் அலைந்து திரிந்து வாழ்கையின் இறுதிக் கட்டத்திற்கே சென்றுவிட்டான். தெய்வம் மனித ரூபத்தில் வரும் என்பார்கள். அது நிச்சயமாக உண்மை தான். அஞ்சா ரிகரின் லோவன் என்னும் டென்மார்க் நாட்டுப் பெண், நைஜீரியாவுக்கு சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொண்டவேளை. இச்சிறுவன் அலைந்து திரிந்த வீதிக்கு தற்செயலாகச் சென்றுள்ளார்.

இந்தச் சிறுவன் உடலில் சூரியன் சுட்ட எரி காயங்கள், உடலின் பல பகுதிகளில் புண் அதில் சில இடங்களில் ஒட்டுண்ணி புழுக்கள் ஒட்டிக்கொண்டு இருக்கக் கண்டு அவர் கண் கலங்கிவிட்டார். என்ன தான் நடக்கிறது என்று கேட்டால். ஊர் மக்கள் சொன்ன விடயம் அவரை மேலும் திகைப்பில் ஆழ்த்தியது.



தாகத்தில் தவித்துக்கொண்டு இருந்த அச்சிறுவனுக்கு முதலில் தண்ணீர் கொடுத்து, அவனை ஒரு துணியால் போர்த்து தனது காரில் படுக்க வைத்தார். உடனடியாக எங்கே சிறுவர்களுக்கான வைத்தியசாலை இருக்கிறது என்று அறிந்து அங்கே அவனைக் கொண்டுபோய் சேர்க்க அவர் முடிவு செய்தார். எந்த ஒரு பெயரும் இல்லாமல் இருந்த



அச்சிறுவனுக்கு 'ஹோப்பி' என்று பெயர் சூட்டினார். வெள்ளைக்காரப் பெண் எடுத்து வந்ததனால் உடனே வைத்தியசாலை அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு. அவனது வயிற்றில் காணப்பட்ட புழுக்களை அகற்றி, அவனைக் குளிப்பாட்டி ரத்ததையும் ஏற்றியுள்ளார்கள்.

அவன் நிலையை உடனே படம் பிடித்த டென்மார்க் சீமாட்டி , அதனை வெளிநாட்டு மீடியாக்களுக்கு அனுப்ப பெரும் செய்தியாக இது பிரசுரிக்கப்பட்டுள்ளது. லண்டனில் இருந்து மட்டும் பல நூறு மக்கள் இச்சிறுவனுக்கு உதவ முன்வந்துள்ளார்கள். இதனால் இச்சிறுவனின் எதிர்காலம் தற்போது நம்பிக்கை மிக்கதாக மாறியுள்ளது. படிப்பறிவில்லாத மக்கள் செய்யும் கொடுமை இது ! படித்த மற்றும் பண்புள்ள மக்கள் செய்யும் காரியம் இதுதான் என்று உலகிற்கு உணர்த்தும் வண்ணம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது!



# செயற்கைக் கால் பொருத்தப்பட்ட கிளி

கால் ஒன்றை இழந்த ஒரு கிளிக்கு முப்பரிமாண அச்சிடல் (3டி பிரிண்டிங்) முறையில் தயாரிக்கப்பட்ட செயற்கை கால் பிரித்தானிய மருத்துவர்களால் பொருத்தப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட்ஷயர் பிராந்தியத்தைச் சேர்ந்த இக் கிளிக்கு மிஸ்டர் பென் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த கிளியை வளர்த்து வந்த ஒருவர் அதை தொடர்ந்து பராமரிக்க முடியாதிருப்பதாகக் கூறி. பறவைகள் பாதுகாப்பு நிலையமொன்றில் அதை ஒப்படைத்தார்.

அதையடுத்து 3 டி பிரிண்டிங் முறையிலான செயற்கைக் கால் தயாரிக்கப்பட்டு. அண்மையில் சத்திரசிகிச்சை மூலம் மேற்படி கால் இக் கிளிக்கு பொருத்தப்பட்டுள்ளது.

பிரிட்டனில் பறவையொன்றுக்கு இத்தகைய சத்திரசிகிச்சை செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை எனக் கருதப்படுகிறது.

# மர வீடுகள்

நியூயோர்க்கைச் சேர்ந்த 27 வயது ஃபாஸ்டர் ஹண்டிங்டன் ஃபேஷன் டிசைனராக இருந்தார். திடீரென்று அந்த வேலை பிடிக்காமல் போய்விட்டது. 2011ஆம் ஆண்டு தன் வேலையை விட்டுவிட்டார். தன்னுடைய வீடு. நிலம் போன்ற சொத்துகளை விற்றார். சில மாதங்கள் நகரும் வேனில் குடியிருந்தார். பிறகு அதுவும் சலிப்பைத் தந்தது. விதவிதமாகப் புகைப்படங்கள் எடுத்து. போட்டோ புத்தகங்களைத் தயாரித்து விற்பனை செய்தார்.

2014ஆம் ஆண்டு தன்னுடைய சிறு வயதுக் கனவான மரவீடு கட்ட முடிவு செய்தார். சேமிப்புகளை எடுத்துக்கொண்டு. வொஷிங்டனில் உள்ள ஸ்காமானியாவுக்கு சென்றார். அவரது குடும்பத்துக்குச் சொந்தமான இடத்தில் 2 மரங்களில் வீடுகளைக் கட்டத் திட்டமிட்டார். தன்னுடைய கல்லூரி நண்பர்கள் 20 பேரை அழைத்தார். ஆளுக்கு ஒரு வேலையாகப் பகிர்ந்துகொண்டு மர வீடுகளை உருவாக்கினார்கள். ஒரு வீடு 20 அடி உயரத்திலும் இன்னொரு வீடு 30 அடி உயரத்திலும் அமைக்கப்பட்டது. 2 வீடுகளையும் மரப் பாலத்தால் இணைத்தனர்.

அதிகாலை ஆயிரக்கணக்கான பறவைகள் மரங்களில் இருந்து கிளம்பும் காட்சி அற்புதமாக இருக்கும். மேகங்கள் மிக அருகில் தொட்டுச் செல்லும். மான்கள் துள்ளி விளையாடும். தூரத்தில் அருவி கொட்டிக்கொண்டிருக்கும். பனிக் காலத்தில் மட்டும் கொஞ்சம் கடினமாக இருக்கும். தண்ணீர் உறைந்துவிடும். பொழுது போக்குவதற்காக ஸ்கேட்டிங் திடல் கட்டியிருக்கிறோம். இது மட்டுமே செங்கல், சிமெண்ட் மூலம் கட்டப்பட்டிருக்கிறது. இயற்கையுடன் சேர்ந்து வாழும் இந்த வாழ்க்கையில் கிடைக்கும் மகிழ்ச்சியை நான் இதுவரை அனுபவித்தது இல்லை என்கிறார் ஃபாஸ்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 492 7419

## சட்டம் ஒழுங்கு பேணும் முறைமை நலிந்து போகிறதே...

நள்ளிரவு நேரத்தில், தமது முகங்களை மூடி மறைத்தவாறு, ஆறு வீடுகளுக்குள் உட்புகுந்து, கத்தி முனையில் பல இலட்சம் ரூபா பெறுமதி யான நகைகள் மற்றும் பெருந்தொகைப் பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பகுதியில், பூதர்மடம் மற்றும் கரந்தாய்ப் பகுதியில் நள்ளிரவு நேரத்தில் பெரும் கொள்ளைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

கொள்ளை, திருட்டு, வழிப்பறி என்பன குடா நாட்டின் சகல பிரதேசங்களுக்கும், பகுதிகளுக்கும், மூலை முடுக்குகளுக்கும் பரவி வருகின்றன. பெரும் எடுப்பில் நாளந்தம் பல்கிப் பெருகுகின்றன.

சட்டம், ஒழுங்கு நாளாந்தம் நலிந்து வரும் போக்கு மேலெழுகின்றது. தட்டிக் கேட்க எவரும் இல்லை என்றால், தம்பி சண்டப்பிரசண்டன் என்ற நிலை உயர்ந்து வருகிறது.

நல்லாட்சி என்ற "மந்திரம்" மக்களையும் அவர்களின் சொத்துக்களையும் பாதுகாப்பதில் போதிய, வேண்டிய செயல் திறனை முன்னெடுக்காமல் இருப்பது ஏன்?- என்ற பென்னம் பெரிய வினாவை உயர்த்தி நிற்கிறது.

கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படாத வகையில், இவ்வகை சார்ந்த மக்கள் விரோத செயற்பாடுகளைக் கண்டும் காணாத போக்கு விரித்து விடப்படுகிறதா என்ற தொக்கு நிற்கும் வினாவும் மேலெழுகிறது; உயர்ந்து விரிகிறது.

கொள்ளை, வழிப்பறி, திருட்டு, போதைப் பொருள் உடைமை மற்றும் அவற்றை ஒத்த குற்றங்களுக்கு மிகக்கூடிய தண்டனை விதிக்கப்படும் என்றும் --

எந்தக் கட்டத்திலும், வழக்கு விசாரணை - வழக்கு - முடியும்வரை பிணை வழங்கப்படமாட்டாது என்றும், யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி தகவல் வெளியிட்டதை இங்கே சுட்டிக்காட்டுவது; பொருந்திப் பார்ப்பது பொருத்தமானதும் அவசியமானதும் ஆகும்.

கொக்குவில், குளப்பிட்டிப் பகுதியில் நடைபெற்ற திருமண வீட்டுக்கு வருகை தந்திருந்த பெண் ஒருவரிடம், பத்தொன்பது லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவத்தையும் இங்கே சுட்டிக்காட்டுவது மிகப் பொருத்தம்.

முன்னர், வழிப்போக்கர்களிடம் வீதிகளில் நகைகள் மற்றும் பணத்தைத் தட்டிப்பறித்துக் கொண்டு செல்லும் திருடர்கள் - கொள்ளைக் காரர்கள் - இப்போதெல்லாம் பகிரங்கமாக வீடுகளுக்குள் புகுந்து கொள்ளை அடிக்கும் போக்குப் பெருகிக் காணப்படுகிறது. மிக மோசமான நிலை, ஆபத்தான சூழல் அளவு, கணக்கின்றி 'மலிந்து' காணப்படுகிறது. !

சட்டமும் ஒழுங்கும் உரிய பரிமாணத்தில் பேணப்படாவிடில், நல்லாட்சி என்று சப்புக்கட்டுவதால் எதுவும் சீராகாது. அர்த்தமற்ற வெறும் ஏய்க்காட்டுதலாகவே பரந்து, படர்ந்து விரியும்!

# சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது?

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு இன்றுவரை பதில் கிடைக்கவில்லை. படையினரிடம் சரணடைந்தவர்கள் இப்பொழுது தடுப்புக்காவலில் இல்லை என அன்றைய அரசு அறிவித்திருந்தது. புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் பொது மக்களும் படைகளிடம் சரணடைந்தனர். அவர்கள் பற்றிய விபரம் எதுவும் வெளிவரவில்லை என அவர்களது உறவினர்கள் தொடர்ந்து



வலியுறுத்தி வருகின்றனர். இது தொடர்பாகப் பல போராட்டங்களை அவர்கள் நடத்தி உள்ளனர். எதற்கும் அசைந்து கொடுக்காத அரசு சரணடைந்தவர்கள் அனைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர், விடுதலை செய்யப்பட்டு விட்டனர் என்கிறது. சரணடைந்தவர்களின் உறவினர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

சரணடைந்தவர்கள் பற்றிய விவகாரம் பூதாகரமாக கிளம்பியதால் வெளிநாடுகள் இதில் அதிக அக்கறை காட்டின. ஐ.நாவும் சரணடைந்தவர்கள் பற்றிய விவகாரத்தை கையில் எடுத்தது. காணமல் போனவர்களை கண்டறிவதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆணைக்குழு ஒன்றை அமைத்தார். அந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் சட்சியமளித்தவர்கள் தமது உறவினர்களை படையினரிடம் ஒப்படைத்ததாக தெரிவித்தனர். எத்தனையாவது படைப் பிரிவு, அதனுடைய பொறுப்பாளர் யார் போன்ற விபரங்களையும் அவர்கள் ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பித்தனர். இரகசிய முகாம்கள் இருப்பதாகத் தெரிவித்தபோது அதனையும் அன்றைய அரசு மறுதலித்தது.

பின்னர் இரகசிய முகாம்கள் பற்றிய விபரங்கள் வெளியாகின.

இறுதிக்கட்ட யுத்தம் கொடூரமாக நடந்தபோது சரணடையும் புலிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என அரசாங்கம் உத்தரவாதமளித்தது. அதனை நம்பிய பல புலி உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்தனர். படையினரிடம் கையளிக்கப்பட்ட முக்கியமான புலி உறுப்பினர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் எங்கே வைக்கப்பட்டுள்ளனர் என படையினர் அறிவிக்கவில்லை என அவர்களது உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த எழிலன் என அழைக்கப்படும் சின்னத்துரை சசிதரன் உட்பட சிலர் முல்லைத்தீவில் உள்ள 58 ஆவது படைப் பிரிவிடம் சரணடைந்தனர். அவர்களைப் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டும் என சரணடைந்தவர்களின் உறவினர்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு

**புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் பொது மக்களும் படைகளிடம் சரணடைந்தனர். அவர்கள் பற்றிய விபரம் எதுவும் வெளிவரவில்லை என அவர்களது உறவினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இது தொடர்பாகப் பல போராட்டங்களை அவர்கள் நடத்தி உள்ளனர். எதற்கும் அசைந்து கொடுக்காத அரசு சரணடைந்தவர்கள் அனைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர், விடுதலை செய்யப்பட்டு விட்டனர் என்கிறது. சரணடைந்தவர்களின் உறவினர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊர்மிளா

மனுவைத் தாக்கல் செய்தனர். அதனை விசாரணைக்கு எடுத்த வவுனியா மேல் நீதிமன்றம் அச்சம்பவம் முல்லைத்தீவில் நடைபெற்றதால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டது.

மிக முக்கியமான வழக்கு என்பதனால் பலரது கவனம் இந்த விசாரணையின் பக்கம் திரும்பியது. 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சாணக்கிய குணவர்த்தன இராணுவத்தரப்பில் சாட்சியமளித்தார். வழமை போன்றே ஆட்கொணர்வு மனுவில் குறிப்பிடப்பட்டவர்கள் 58ஆவது படைப்பிரிவில் சரணடைந்ததற்கான பதிவுகள் எதுவும் தம்மிடம் இல்லை என்றார். மனுதாரர் சார்பில் ஆஜரான



சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் குறுக்கு விசாரணை செய்தபோது 58 ஆவது படைப்பிரிவில் சரணடைந்தவர்களின் பெயர் பட்டியல் முகாமில் இருப்பதாகவும் ஆட்கொணர்வு மனுவில் குறிப்பிடப்பட்டவர்களின் பெயர் அதில் இல்லை எனவும் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 58 ஆவது படைப்பிரிவில் சரணடைந்தவர்களின் பெயர்ப் பட்டியலை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனச் சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் உத்தரவிட்டார். சரணடைந்தவர்கள் பற்றிய விபரம் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. படையினரிடம் சரணடைந்தவர்களும் கையளிக்கப்பட்டவர்களும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. அவர்களைப்பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை. சரணடைந்தவர்களைப் பற்றிய விபரங்களை வெளியிடுமாறு தொடர்ந்து வலியுறுத்தபட்டு வந்தது. காணமல் போன எவரும் சரணடையவில்லை என்பதே இராணுவத்தின் பதிலாக உள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்தவர்களைப் பற்றிய விபரங்கள் வெளிவருவது சிறந்த ஆரம்பம். சரணடைந்தவர்கள் பற்றிய பூரணமான விபரம் எவையும் இதுவரை வெளிவரவில்லை. அரசாங்கம் அப்போது கூறிய எண்ணிக்கை மிகவும் குறைவானது என சரணடைந்தவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

58ஆவது படைத்தளத்தில் சரணடைந்தவர்கள் தொடர்பில் இராணுவம் வசம் உள்ள ஆதாரங்களை நீதிமன்றில் முன்வைக்க வேண்டும் என்று தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கையில்

“இறுதி யுத்தத்தில் இராணுவம் வசம் சரணடைந்த பொதுமக்கள் தொடர்பில் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்வது சிறந்த விடயமாகும். உண்மைகளைக் கண்டறிய இது நல்லதொரு ஆதாரமாகும். குறிப்பாக காணாமல் போனதாகக் கூறப்படும் பொதுமக்கள் தொடர்பில் உண்மைகளை கண்டறியும் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஆணைக் குழுவின் கால எல்லையும் நீட்டிக்கப்பட்டுள்ளது.



இந்த காலப்பகுதியில் காணாமல் போனதாகக் கூறப்படும் பொதுமக்கள் தொடர்பில் மேலும் ஆதாரங்களைத் திரட்ட வாய்ப்புகள் உள்ளன. இராணுவம் வசமுள்ள ஆதாரங்களை முன்வைப்பதன் மூலம் இந்தச் செயற்பாடு இன்னும் இலகுவாக்கப்படும்.

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் நீதிமன்ற சுயாதீன செயற்பாடுகளுக்கென விசேட சட்டமூலம் ஒன்றையும் இந்த ஆண்டு நடுப்பகுதிக்குள் கொண்டுவர தீர்மானித்துள்ளோம். ஆகவே போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் அரசாங்கம் தெளிவாகத் தமது நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது என்றார்.

**சரணடைந்தவர்களைப் பற்றிய விபரங்களை மறைக்காமல் வெளியிட்டால், அவர்களைப் பற்றிய உண்மை வெளிவரும். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டவர்களையும் சரணடைந்தவர்களையும் பற்றிய விபரங்கள் படைக்கட்டளைத் தலைமையகங்களில் இருந்தால் அவற்றின் மூலம் உண்மை வெளிவரும் என்ற நம்பிக்கை உள்ளது.**

இறுதி யுத்தத்தில் இராணுவம் வசம் சரணடைந்த பொது மக்கள் தொடர்பில் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்வது சிறந்த விடயமாகும். உண்மைகளை கண்டறிய இது நல்லதொரு ஆதாரமாகும். இவ்வாவணங்கள் விசாரணை செயற்பாடுகளுக்கு வலுச் சேர்ப்பதாக அமையும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தவர்கள் மற்றும் அவர்களுக்கு ஆயுத, பண உதவிகளை வழங்கியவர்கள் தேசத்துரோகிகள் எனவும் அரசாங்கம் குறிப்பிட்டது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கு பண உதவிகளையும், ஆயுத உதவிகளையும் வழங்கியோர் தொடர்பில் விரைவில் சரத் பொன்சேகா தகவல்களை வெளியிடுவார் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.



சரணடைந்தவர்களைப் பற்றிய விபரங்களை மறைக்காமல் வெளியிட்டால், அவர்களைப் பற்றிய உண்மை வெளிவரும். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டவர்களையும் சரணடைந்தவர்களையும் பற்றிய விபரங்கள் படைக்கட்டளைத் தலைமையகங்களில் இருந்தால் அவற்றின் மூலம் உண்மை வெளிவரும் என்ற நம்பிக்கை உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரசிகர்களை சலிப்படைய வைக்கிறதா மிருதன்?

அடுத்தடுத்து விமர்சகர்களின் பாராட்டைப் பெற்ற வெற்றிப் படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் ஜெயம் ரவி, நாய்கள் ஜாக்கிரதை' என்ற வித்தியாசமான வெற்றிப் படத்தைக் கொடுத்த இயக்குனர் சக்தி சௌந்தர ராஜனுடன் இணைந்திருக்கும் படம் என்பதே 'மிருதன்' படத்தைப் பெரிதும் எதிர்பார்க்க வைத்தது. தமிழின் முதல் ஜாம்பி (zombie) வகைப் படம் என்ற அறிவிப்பு, எதிர்பார்ப்பை பல மடங்கு அதிகரித்தது. மிகக் கடுமையான உழைப்பில் இந்தப் படத்தைத் உருவாக்கி இருக்கிறது 'மிருதன்' படக்குழு என்பதை ட்ரைலரிலேயே உணர முடிந்தது. படத்தில் அந்த எண்ணம் உறுதியாகிறது. அந்த உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்குமா?

ஊட்டியில் ஒரு தொழிற்சாலையின் விஷக் கழிவு கலந்த நீரைக் குடிக்கும் நாய் ஜாம்பியாக உருவெடுக்கிறது. அந்த நாய் ஒரு மனிதனைக் கடிக்க அவர் ஜாம்பியாகிறார். அந்தக் வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றவர்களையும் கடித்து பரப்பிவிடும் மூர்க்க மிருகத்தன்மையை அடைகிறார்கள். இதனால் ஊரில் ஒவ்வொருவரிடமும் பரவுகிறது ஜாம்பி வைரஸ்.

அதே ஊரில் போக்குவரத்துக் காவலராக இருக்கும் ஜெயம் ரவி எந்த வம்புதும்புக்கும் போகாமல் தன் ஒரே தங்கைக்கு அனைத்துமாக வாழ்ந்துவருபவர். மருத்துவராக இருக்கும் லட்சுமி மேனனைக் காதலிக்கிறார். ஆனால் லட்சுமிக்கு அவரை ஒரு லஞ்சம் வாங்கும் காவலராக மட்டுமே தெரியும். அதோடு அவருக்கு வேறொருவரோடு திருமணம் நிச்சயமாகிவிட்டது என்பதால் ரவி தன் காதலை மறைத்துவிடுகிறார். .

ஜாம்பி பரவல் கட்டுக்கடங்காமல் போகிறது. அதற்கான மருந்து கண்டுபிடிக்க லட்சுமி மேனன் உள்ளிட்ட மருத்துவர்கள் குழுவை ஜெயம் ரவி, தன் தங்கையுடன் கோயம்புத்தூருக்கு அழைத்துச் செல்லும் சூழல் உருவாகிறது.

ஜாம்பி வைரஸுக்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டதா? கோவைக்குத் தப்பிச் சென்றவர்கள் ஜாம்பியிடமிருந்து தப்பித்தார்களா? என்பவை மீதிக் கதையில் சொல்லப்படுகின்றன.

ஆங்கிலப் படங்களில் பார்த்த 'ஜாம்பி' என்ற புதிய விஷயத்தை



தமிழுக்கு அறிமுகம் செய்திருக்கிறார் இயக்குனர் சக்தி சௌந்தர ராஜன். அதோடு, காதல், அண்ணன் - தங்கை - பாசம், நகைச்சுவை வசனங்கள், தீமையை அழிக்க ஒற்றையாளாகக் களமிறங்கு நாயகன் எனத் தமிழ் சினிமா பார்வையாளர்களின் ரசனைக்கேற்ற அம்சங்களைக் கலந்த படமாக 'மிருதன்' படத்தை வழங்க முயற்சித்திருக்கிறார். ஆனால் இவை மட்டும் ஒரு படத்தைக் கரைசேர்த்துவிடாது. எதைச் சொன்னாலும் சுவாரஸ்யத்துடனும் நம்பகத்தன்மையுடனும் சொல்ல வேண்டும். இவை இரண்டில் ஏதேனும் ஒன்று முன்னப் பின்ன இருந்தால் பரவாயில்லை. இரண்டுமே பெரிய அளவில் கைகூடவில்லை என்பதுதான் 'மிருதன்' படத்தின் ஆகப் பெரிய குறை.

'ஜாம்பி' வைரஸ் தோன்றிப் பரவுவதை விவரிக்கும் தொடக்கக் காட்சிகள் நிமிர்ந்து உட்காரவைக்கின்றன. தொடர்ச்சியாக வரும் காட்சிகளில் அண்ணன் தங்கை உறவையும், நாயகனிடம் காதலையும் சொல்ல தேவைக்கதிகமான நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவற்றில் புதுமையாகவோ சுவாரஸ்யமாகவோ எதுவும் இல்லை. நாயகனின் தங்கையாக வரும் பெண் பேசும் வசனங்கள் அவரது வயதுக்கு ஏற்றதாக இல்லை. சற்று அதிக வயதுப் பெண்ணை நடிக்க வைத்திருக்கலாம் அல்லது வசனங்களை வேறு மாதிரி எழுதியிருக்கலாம்.




வைரஸின் பரவல் தீவிரமடைந்து அனைவரது உயிருக்கும் ஆபத்து ஏற்படும் நிலை வந்தவுடன் மீண்டும் வேகமெடுக்கிறது திரைக்கதை. இடைவெளியில் பெரிய எதிர்பார்ப்பு ஏற்படுகிறது.

ஆனால் அதைத் தொடர்ந்து ஜாம்பிகளின் ஒரே மாதிரியான தாக்குதலும் நாயகன் துப்பாக்கியை வைத்து அனைத்து ஜாம்பிகளையும் சுட்டு வீழ்த்துவதும் மட்டுமே மாறி மாறி வந்து அலுப்பூட்டுகின்றன. கடைசி 20 நிமிடங்களில் நிகழும் சின்ன சின்ன எதிர்பாராத திருப்பங்களும், இரண்டாம் பாகத்துக்கான அறிவிப்புடன் படத்தை முடித்திருக்கும் விதமும் ஓரளவு படத்தைக் காப்பாற்றுகின்றன.

இந்த இடங்களில் 'சென்டிமெண்ட்' மற்றும் காதல் வெளிப்படும் காட்சிகளும் ரசிக்க வைக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. ஜாம்பிகளின் பெருங் கூட்டத்தை எதிர்த்து நாயகன் நாயகியைக் காப்பாற்றும் காட்சி நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

திரைக்கதையில் பல லாஜிக் ஓட்டைகள். 24 மணிநேர செய்தித் தொலைக்காட்சிகளும், சமூக ஊடகங்களும் பரவி இருக்கும் இந்தக் காலகட்டத்தில் ஓர் உயிர்க்கொல்லி வைரஸ் ஊர் முழுவதும் பரவுவதை தினத் தந்தி பத்திரிகையை ஏதேச்சையாகப் பார்ப்பதன் மூலம்தான் தெரிந்துகொள்கிறார் நாயகன்.

ஒரு வைரஸ் பரவுவதால் ஊரில் இருக்கும் ஒவ்வொருவர் உயிருக்கும் ஆபத்து என்றால் ஏற்பட வேண்டிய பதற்றம் பார்வையாளர்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே தொற்றிக் கொள்கிறது. அவ்வப்போது ஏற்படும் பதற்றத்தையும் அளவுக்கதிகமான நகைச்சுவை வசனங்களை வைத்து மட்டுப்படுத்திவிடுகிறார்கள். அந்த வசனங்கள் பெரும்பாலும் சிரிப்பையும் வரவழைக்கவில்லை என்பது மற்றுமொரு சிக்கல். குறிப்பாக 'என்னமா இப்படிப் பண்றீங்களேம்மா' வசனத்திலிருந்து தமிழ் சினிமாவுக்கு எப்போது விமோசனம் கிடைக்கப் போகிறது என்று தெரியவில்லை.

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரச்சினைகளைக் கைவிட்ட வடமாகாணசபை

- வானதி



இலங்கைத் தமிழர்களின் இருப்பை வெளிக்காட்டும் முகமாக வடமாகாண சபையைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கைகளில் ஒப்படைத்தவர்களின் எதிர்பார்ப்புகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. வாக்குகளை அள்ளி வழங்கினால் தமிழ் மக்களின் வாழ்வில் வசந்தம் வீசும் என்ற வாக்குறுதி சிதறடிக்கப்பட்டு விட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னால், முதலமைச்சர் சத்தியப்பிரமாணம் செய்ததை தமிழ் மக்கள் சங்கடத்துடன் ஏற்றுக் கொண்டனர். அமைச்சர் பதவி வேண்டும் என்ற குத்து வெட்டுடன் ஆட்சி ஆரம்பமானது. ஆளுநர் சந்திரசிறி இருக்கும் வரை வடமாகாண சபை சுயமாக இயங்காது என்ற எண்ணம் மேலோங்கியதால் அவரின் மீது மக்கள் கோபம் கொண்டனர்.

நல்லெண்ண ஆட்சியினால் வடமாகாண ஆளுநர் மாற்றப் பட்டார். அதன் பின்னரும் வடமாகாண சபையில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இரண்டரை வருடங்களில் வடமாகாண சபையின் செயற்பாடு எதிர்பார்த்தது போன்று இல்லை. வடமாகாண சபையின் ஆட்சி பற்றி, வெளியில் இருந்து வரும் விமர்சனங்கள் உண்மையா? பொய்யா? எனத் தெரியாது மக்கள் குழம்பி இருக்கும் போது, அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிரர்ன குற்றச்சாட்டுக்கள் வடமாகாண சபையின் பேசுபொருளாக மாறியுள்ளது. ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் அவருக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியது முக்கிய திருப்பமாக உள்ளது.

முதலமைச்சர் சீ.வி.விக்கி னேஸ்வரன் அமைச்சர் ஐங்கர நேசன் ஆகியோர் ஒருபக்கமாக வும், அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், மற்றும் சில உறுப்பினர்கள் இன்னொரு பக்கமாகவும் அணிவகுத்து கூட்டமைப்புக்குள் இருக்கும் பனிப்போரை அம்பலமாக்கி னார். கூட்டுறவுத்துறையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பாக அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் வடமாகாண சபையில் தெரிவித்தபோது அதனை சபையில் தெரிவிப்பது பிழையான செயல் என முதலமைச்சர் சுட்டிக்காட்டி னார். இந்தப் பிரச் சினை தொடர்பாக முதலமைச்சருக்கும் அவைத் தலைவருக் கும் இடையே கார சாரமான வாக்குவாதம் நடைபெற்றது. முதலமைச்சரை அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்த்துப் பேசும் சூழல் உருவாகியுள்ளது.

சுன்னாகம் நிலத் தடிநீர் மாசடைந்தது தொடர்பாக அமைச்சர் ஐங்கர நேசனுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டது. அப்போது முதலமைச்சர் தனது அமைச்சரைக் காப் பாற்றுகிறார் என்ற விமர்சனம் முன் வைக்கப்பட்டது. இவை எல்லாம் கூட்டமைப்புக்கு எதிரான குற்றச்சாட்டு என்ற எண்ணமே மேலோங்கியது. கூட்டுறவுத் துறையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு அவற்றை எல்லாம் மழுங்கடித்து விட்டது. அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராக பதினொரு குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வடமாகாண சபை உறுப்பினர் கே.ரி.லிங்கநாதன் பிரேரணை ஒன்றை முன்வைத்து விசாரணை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். முக்கியமான பிரேரணையை முன் அறிவித்தல் இன்றிச் சமர்ப்பிக்க முடியாது என முதலமைச்சர் சுட்டிக் காட்டினார். உறுப்பினர்களின் நெருக்குதலினால் முதலமைச்சர் இறங்கி வந்து பிரேரணையை முன்மொழிந்தார்.




சுன்னாகம் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட நீரை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த நிறுவனத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். வடமாகாண சபை கேட்டதற்கிணங்கவே இந்த ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய வடிகாலமைப்புச் சபையின் ஆய்வு அறிக்கைக்கும், வடமாகாண சபையின் சார்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன. இலட்சக்கணக்கில் செலவு செய்யப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டன. அவை மாடுகளுக்கு உணவாக மாறிவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**சுன்னாகம் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட நீரை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த நிறுவனத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். வடமாகாண சபை கேட்டதற்கிணங்கவே இந்த ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய வடிகாலமைப்புச் சபையின் ஆய்வு அறிக்கைக்கும், வடமாகாண சபையின் சார்பில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன.**

சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பான செயற்பாடு, இரணைமடு நீர்ப்பாசனத் திட்டம், பளையில் நிறுவப்பட்ட காற்றாலை, மருதங்கேணி கடல் நீரை நன்னீராக்கும் திட்டம், கார்த்திகை மரநடுகை, அனர்த்த நிவாரண விநியோகம், உழவர் திருநாள், மலர் கண்காட்சி, விவசாயிகள்

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிம்மசொப்பனம் -63

தாய்நாட்டுப் பற்று இல்லையென்றால் மக்கள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும், பாடிஸ்டா என்னாவது செய்து கொள்ளட்டும் என்று இருந்திருப்போம்.
'அப்படியானால் நீங்கள் யார் மீது குற்றம் சுமத்துகிறீர்கள்?'
காஸ்ட்ரோ தெளிவான குரலில் தன்னைச் சுற்றியிருப்பவர்களைப் பார்த்துக் கொண்டே கூறினார். பாடிஸ்டா மீது.வழக்கு மறுநாள் ஒத்திவைக்கப்பட்டது.
அப்பட்டமாக பாடிஸ்டா மீது காஸ்ட்ரோ சுமத்திய குற்றச்சாட்டைக் கேட்டு அரசு அதிகாரிகள் கோபமும் எரிச்சலும் அடைந்தனர். ஒரு சாதாரண கைதி இத்தனை துடுக்குத் தனத்துடன் ராணுவ முகாமைத் தாக்கவும் செய்து அதற்கு நியாயமும் கற்பிக்கிறானே?தவிரவும் பாடிஸ்டா மீதல்லவா இவன் குற்றம் சுமத்துகிறான்? அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். இனியும் காஸ்ட்ரோவை நீதிமன்றத்துக்கு அழைத்து வரக்கூடாது. மக்கள் அவரது பேச்சைக் கேட்டால் கட்டாயம் குழம்பிப் போவார்கள் . இந்தக் கலகக்காரனை விட்டு வைத்தால் அரசாங்கத்துக்கே ஆபத்து. சாவியானோ எனும் அதிகாரிக்கு ஒரு திட்டம் தோன்றியது. பேசாமல் சிறைச்சாலையில் வைத்து காஸ்ட்ரோவைச் சுட்டுக்கொன்று விட்டு, தப்பி ஓட முயன்றார். அதனால், சுட்டுவிட்டோம் என்று சொல்லிவிட்டால் என்ன? மற்றொருவர் வேறொரு யோசனையை முன்வைத்தார். சுட்டுக்கொன்றால் அனைவருக்கும் தெரிந்து விடும். அதனால் அவர் புகைக்கும் சுருட்டில் விஷம் வைத்து விடலாம். இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அது நிறைவேறவில்லை.
சிறையிலிருந்த ஆயுள் கைதிகளுக்கு இந்த விஷயம் எப்படியோ போய்ச் சேர்ந்தது. அவர்கள் உடனடியாக காஸ்ட்ரோவை எச்சரித்தனர். காஸ்ட்ரேர் சுருட்டுப் பெட்டி பக்கமே போகவில்லை. சிறை அதிகாரிகள் அளிக்கும் உணவையும் கவனமாக வாங்கி வந்து மணலில் கொட்டினார். காஸ்ட்ரோவால் சுருட்டு பிடிக்காமல் இருக்க முடியாது என்பது அவரது தோழர்களுக்குத் தெரியும். காஸ்ட்ரோ என்றால் புரட்சி. புரட்சிக்கு அடுத்த படியாக சுருட்டு. இது தான் தோழர்கள் காஸ்ட்ரோவை ப் பற்றி அறிந்து வைத்திருந்தது. அதனால், வெளியிலிருந்து புகையிலையைத் தருவித்து காகிதம் கொண்டு சுருட்டி, அவர்களாகவே சுருட்டுக்களைத் தயாரித்து காஸ்ட்ரோவுக்கு வழங்கினர். மீண்டும் எப்போது நீதிமன்றம் போவோம் என்று காத்துக் கொண்டிருந்தார் காஸ்ட்ரோ.
அடுத்த முறை பேச அனுமதித்தால் என்னென்ன பேச வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.
செப்ரெம்பர் 26. நீதிமன்றம் கூடியது. அனைவரது கண்களும் காஸ்ட்ரோவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால் அவரைக் காணவில்லை. ஃபிடல் காஸ்ட்ரோ மீதான விசாரணையைத் தொடங்கலாம்' என்று அறிவிக்கப்பட்டது.
'மன்னிக்க வேண்டும் நீதிபதி அவர்களே.காஸ்ட்ரோ இன்று வரவில்லை' என்றார் இராணுவ அதிகாரி.
'ஏன்?' என்றார் நீதிபதி.
'அவருக்கு உடல்நிலை சரியில்லை . நடமாட முடியவில்லை. எழுந்து நிற்கக் கூட முடியாத நிலையில் உள்ளார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் கட்டாயம் ஓய்வில் இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டனர்.
'அதற்கு என்ன ஆதாரம்?'
'இதோ மருத்துவர் கொடுத்த சான்றிதழ்' என்று கூறியபடி அந்தச் சான்றிதழை நீதிபதிக்கு வழங்கினார் அந்த அதிகாரி.
'சரி , அப்படியானால் காஸ்ட்ரோ உடல் நலம் அடைந்த பிறகு விசாரணையைத் தொடங்கலாம்' என்றபடி தனது இருக்கையை விட்டு எழுந்தார் நீதிபதி.
திடீரென்று ஒரு பெண் குரல். 'ஒரு நிமிஷம் நீதிபதி அவர்களே..'



அனைவரும் ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தனர். மெல்பா விறுவிறுவென்று நடந்து வந்த மெல்பா நேராக நீதிபதியை நோக்கிச் சென்றார். 'இங்குள்ளவர்கள் பொய் சொல்கிறார்கள். காஸ்ட்ரோ நலமாகத்தான் இருக்கிறார்'
'அதற்கு என்ன ஆதாரம்?' என்றார் நீதிபதி.
மெல்பா அவசரப்படாமல் தன் தலைமுடியைத் துழாவினார். சில விநாடிகளில் சுருட்டப்பட்ட ஒரு காகிதம் தோன்றியது. 'இதோ ஃபிடல் காஸ்ட்ரோ தன் கைப்பட நீதிமன்றத்துக்கு எழுதிய கடிதம்.
அது காஸ்ட்ரோவின் கையெழுத்துத்தான் என்பது உறுதி செய்யப்பட்டது. மெல்பா தொடர்ந்தார்.'காஸ்ட்ரோவின் உயிருக்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது. அவரைப் பத்திரமாக நீதிமன்றத்துக்கு வரவழைப்பது நீதிபதிகளின் கடமை.

## சொற்சிலம்பம் போட்டி இல. 713



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### மேலிருந்து கீழ்

1.ஆபத்துச் சமயத்தில் உதவுபவன்.
2.இது இனிக்கும்.
3.தமிழ் வைத்தியத்தின் அடிப்படை.
4.சுருக்கு.
5.பன்மைத்தன்மையைக் குறிப்பது.
8.அடிவயிறு.
9.கீர்த்தி.
10.ஆக மூத்த சகோதரன்.
13.கொடைவள்ளல் ஒருவன்.
15.மன்மதனின் காதலி.
16.வேற்றுவன்.
17.சிந்திக்க.
19.சாப்பிடு.

### இடமிருந்து வலம்

1. பாப்பரசர் பெயரின் தமிழ் வடிவம்.
6.தை, மாசி மாதங்களில் அதிகம் இருப்பது.
7.தாண்டி வா.
8.மேனி.
11.இந்திய தேசம்.
12.இந்த வகை மான் மயிர் இழந்தால் உயிர் வாழாதாம்.
13.சீர்கெட்ட நிலை.
14.ரகம் வகுத்துக் கொள்.
17.கணக்கில் முக்கியம்.
18.வாழ்.
19.சாப்பிட.
20.மூத்தவனிலும் வயதில் சிறிய சகோதரன்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 713

சொற்சிலம்பம் போட்டி 713ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2016 ஆம் ஆண்டு மார்ச் 09 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2016 மார்ச் 16மற்றும் மார்ச் 23ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.
முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 710இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | இ. பவுலினி, இளையதம்பி இல்லம், உடுவில், சுன்னாகம். |
| 2 ஆம் பரிசு | ம.மேசி வெற்றீஷியா, இல; 1625, இரத்தினபுரம் கிளிநொச்சி. |
| 3 ஆம் பரிசு | க. கமலேஸ்வரன், இல; 791, கட்சன் வீதி, வட்டக்கட்சி, கிளிநொச்சி. |

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் அலுவலக நேரத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 492 7419 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 711க்கான விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 1.இயம்புதல். | 1.இதிகாசம். |
| 2.தின். | 5.அவா. |
| 3.கானகம். | 7.யன்னல். |
| 5. அகம்பாவம். | 8.பகல். |
| 6. வால். | 9.கலியாணம். |
| 8. பணம். | 11.புரம். |
| 10.யாசனை. | 13.சம்பாதி. |
| 12.ரவி. | 15.தவி. |
| 14.திரிபுரம். | 16.பானை. |
| 16.பாடம். | 17.வரி. |
| 18.கலவி. | 18.கட. |
| 19.அல்ல. | 19.அம்பு. |
| 20.அரு. | 20.அலம்பல். |
| 21.பதி. | 22.குருவி. |
| | 23.திலகம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேல்தர்மா

# பகடைக் காய்களாகும் குர்திஷ் மக்கள்



> **ரஷ்யா குர்திஷ் போராளிகளைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துகின்றது. ஐக்கிய அமெரிக்கா அவ்வப் போது துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகின்றது. இறுதியில் அவர்கள் பலிக்கடா ஆக்கப்படுவார்கள்.**

சிரியாவிலும் ஈராக்கிலும் நடக்கும் போரில் ஐ எஸ் அமைப்பினருக்கு எதிராகக் காத்திரமான தாக்குதல் செய்யக் கூடியவர்களாகவும் கணிசமான வெற்றியை ஈட்டியவர்களாகவும் குர்திஷ் போராளி அமைப்பினரே இருக்கின்றனர். ஐ எஸ் அமைப்பினர் இரண்டு வகைகளில் குர்திஷ் போராளிகளுக்கு அஞ்சுகின்றனர். ஒன்று அவர்கள் தீரமிக்க போராளிகள். மற்றது அவர்களின் பெண் போராளிகள் ஆண்களிலும் பார்க்க வீரமாகப் போராடுகின்றார்கள். ஒரு பெண்ணால் கொல்லப்படும் புனிதப் போராளி நரகத்திற்குப் போவன் என ஐ எஸ் அமைப்பினர் உறுதியாக நம்புகின்றார்கள்.

### நீலம் பிடிக்கும் குர்துகள்

ரஷ்யப் படைகளின் உதவியுடன் அலெப்பே பிராந்தியத்தில் சிரியப் படைகள் பெரும் தக்குதல்கள் செய்யும் போது குர்திஷ் போராளிகள் தமக்கென சில நிலப்பரப்புக்களைக் கைப்பற்றினர். ரஷ்யப் படைகளினதும் சிரியப் படைகளினதும் நோக்கம் துருக்கிய எல்லையில் இருந்து அமெரிக்க சார்பு போராளிக் குழுக்களைத் துண்டிப்பதாகும். இதனால் அவர்களுக்குத் துருக்கியில் இருந்தும் துருக்கியூடாகவும் கிடைக்கும் விநியோகங்களைத் தடுக்க முடியும். ரஷ்யப் படைகள் குர்திஷ் போராளிகளுக்கு எதிராக எந்தத் தாக்குதல்களையும் மேற்கொள்ளவில்லை. அவர்கள் மற்றக் கிளர்ச்சிக்காரரிகளிட மிருந்து நிலப்பரப்புகளைக் கைப்பற்றுவதை ரஷ்யா விரும்புகின்றது அல்லது ஆட்சேபனை இன்றி இருக்கின்றது எனச் சொல்லலாம்.

ஈரான், ஈராக், சிரியா, துருக்கி ஆகிய நாடுகளில் மூன்று கோடி குர்திஷ் மக்கள் எந்தவித உரிமையும் இன்றி வாழ்கின்றார்கள். அவர்கள்து போராட்டம் பல இனக்கொலைகளுக்கு மத்தியில் ஒரு நூற்றாண்டாகத் தொடர்கின்றது. சிரியாவில் அவர்களுக்கு என்று குடியுரிமை இல்லை. சொந்தமாக நிலம் வைத்திருக்கும் உரிமை இல்லை. சிரியாவில் அவர்கள் வாழும் பிரதேசத்தில் 2.5பில்லியன் பீப்பாய் எரிபொருள் உண்டு ஆனால் அதனால் கிடைக்கும் வருமானத்தில் எதுவும் அவர்களுக்குப் பயன் தருவதில்லை. துருக்கியில் இரண்டு கோடி குர்திஷ் மக்கள் வாழ்கின்றனர். முதலில் அவர்கள் தனிநாடு கோரியும் பின்னர் சுயாட்சி வேண்டியும் போராட்டம் செய்கின்றனர்.

குர்திஷ் மக்களைப் பாதுகாப்பதாக ரஷ்யா உறுதி மொழி வழங்கியுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சிரிய எல்லையைத் தாண்டிச் சென்று துருக்கி தாக்குதல்கள் நடத்தினால் ரஷ்யாவுடன் ஒரு பெரும் போரைத் துருக்கி எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என சிரியாவில் உள்ள குர்திஷ் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். அப்படி ஒரு உத்தரவாதம் குர்திஷ் மக்களுக்குக் கிடைத்திருப்பது பெரும் பேறு. ஆனால் குர்திஷ் மக்களை மோச மான எதிரிகளாகப் பார்க்கும் சிரிய ஆட்சியாளர்களுடனும் அலவைற் இனக்குழுமத்தினருட னும் தற்போது ரஷ்யா மிக நெருங் கிய நட்பைப் பேணுகின்றது. எதிரியின் நண்பனின் உத்தரவாதத்தை எந்த அளவிற்கு நம்பலாம்? ரஷ்யாவைப் பொறுத்த வரை குர்திஷ் மக்களிலும் பார்க்க அரபு மொழி பேசும் அலவைற் இனத்தினர் அதிக கேந்திரோ பாய முக்கியத்துவம் பெற்றவர்கள்.

### குர்திஷ் மக்களும் தமிழர்கள் போலே

ஐக்கிய அமெரிக்காவிற்குத் தேவையான போதெல்லாம் குர்திஸ் மக்களின் போராட்டத்திற்கு உதவுபோல் பாசாங்கு காட்டிக் கொண்டு அவர்களைத் தனக்குப் பிடிக்காத ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட வைப்பதும் பின்னர் அவர்களைக் கைவிடுவதும் அடிக்கடி நிகழ்வதுண்டு. குர்திஸ் மக்களும் தமிழர்களைப் போலவே சரித்திரத்தில் இருந்து கற்றுக் கொள்வதில்லை.

ஓர் இனத்திற்கு அந்நியர்கள் மட்டுப்படுத்தப் பட்ட படைக்கலன்களைக் கொடுத்துப் போராட ஒரு வலுமிக்க அல்லது எண்ணிக்கை அடிப்படையில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட எதிரிக்கு எதிராகப் போராட வைப்பது ஆபத்து மிக்கது. அது இனக்கொலை யிலேயே போய் முடியும்.

1914 ஆம் ஆண்டில் இருந்து 1918 ஆம் ஆண்டு வரை நடந்த முதலாம் உலகப் போரின் பின்னர் 1920ஆம் ஆண்டு செய்யப்பட்ட செவேர்ஸ் உடன்படிக்கையில் குர்திஷ் மக்களுக்கு என ஒரு தேசம் வழங்கப்பட்டது. பின்னர் 1922ஆம் ஆண்டு செய்த லௌசானா உடன்பாட்டின் போது துருக்கி குர்திஷ் மக்களின் தேசத்தை அபகரித்துக் கொண்டது.

1967 ஆம் ஆண்டு ஈராக்கில் சதாம் ஹுசைன் சோவியத் ஒன்றியத்துடன் வர்த்தகத்தை விரிவாக்க முயன்ற போது அவருக்கு எதிராகப் போராட குர்திஷ் மக்களுக்கு மட்டுப்படுத் தப்பட்ட படைக்கலன்களை ஐக்கிய அமெரிக்கா வழங்கியது. அப்போது அமெரிக்காவுடன் நெருங்கிய உறவைப் பேணிய ஈரானூடாக இது நடந்தது. 1972ஆம் ஆண்டு ஈரானுக்குப் பயணம் மேற்கொண்ட ரிச்சர் நிக்சனும் ஹென்றி கிஸ்ஸிங்கரும் குர்திஷ் மக்களுக்கு தொடர்ந்து உதவி செய்வோம் என்ற உறுதி மொழியையும் வழங்கினர். ஈரா னில் மதவாதப் புரட்சி ஏற்பட்டு ஈரான் அமெரிக்காவின் ஒரு மோசமான எதிரியாக மாறிய பின்னர் ஈரானால் ஈராக்கிற்கு ஆபத்து என்ற எண்ணம் ஈராக்கில் திட்டமிட்டு விதைக்கப்பட்டது. இதனால் ஈராக் ஐக்கிய அமெரிக்காவுடன் உறவை வளர்த்துக் கொண்டது. ஈரான் ஈராக் போர் மூண்டது. 1975ஆம் ஆண்டு சதாம் ஹுசைன் குர்திஷ் மக்களுக்கு எதிராக மிக மோசமான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்ட போது அமெரிக்கா தமக்கு உதவும் என குர்திஷ் மக்கள் நம்பி ஏமாந்தனர். ஈராக்கிய குர்திஷ் மக்களின் தலைவர் Mullah Mustapha Brazani ஹென்றி கிஸ்ஸிங்கருக்கு விடுத்த உருக்கமான வேண்டு கோள் அவரது செவியில் ஏறவில்லை.

1991ஆம் ஆண்டு சதாம் ஹுசைய்ன் குவைத்தை ஆக்கிரமித்த போது சிஐஏ சவுதி அரேபியாவில் இருந்து செய்யப் பட்ட ஒரு வானொலி மூலம் குர்திஷ் மக்களை சதாமிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டியது. அவர்களுக்கு எதிராக சதாம் தாக்குதல் செய்த போது அவர்களுக்கு என ஒரு பாதுகாப்பு வலயம் உருவாக்குவதாக அமெரிக்கா அறிவித்தது. பின்னர் அப்பாதுகாப்பு வலயத்தில் வைத்தே அவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

2003ஆம் ஆண்டு அமெரிக்கா சதாம் ஹுசைன் பேரழிவு விளைவிக்கும் படைக்கலன்களை வைத்திருக்கின்றார் என்ற போர்வையில் ஈராக்கின் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெறிக்கு வரும் சிக்கல்

இளைய தளபதி விஜய் நடிப்பில் ஏப்ரல் மாதம் பிரமாண்டமாக வெளிவரும் படம் தெறி. விஜய் படங்கள் தமிழ்நாடு மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, என வெளிநாடு வரை நல்ல வியாபாரம் இருக்கும். இந்த முறை தெறி படத்துடனோ அல்லது ஒரு வார இடைவெளியில் பவன் கல்யான் நடிப்பில் சர்தார் கப்பர் சிங் படமும் வரவிருக்கின்றது.இந்த நிலையில் பவன் கல்யானுக்கு கேரளா, வெளிநாடுகளில் அதிக ரசிகர்கள் இருப்பதால் தெறி படத்தின் வசூலுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமோ என தற்போதே ஒரு பேச்சு ழுந்து வருகின்றது.



# கைகோர்க்கும் நிறு

தமிழ் சினிமாவில் இருக்கும் தயாரிப்பு நிறு...னங்கள் ... விரும்பும் நடிகர்கள் அஜித்-விஜய் தான். இந்த...லையில் கூ... இணைந்து சந்திரமுகி என்ற மாபெரும் வெற்றிப்படத்தை கொ... நிறுவனம் சிவாஜி தயாரிப்பு நிறுவனம்.

இந்த நிறுவனம் கடைசியாகத் தயாரித்த படம் அஜித் நடி... இந்தப்படம் பெரிய லாபத்தை தரவில்லை, இதனால், அஜித்... களுக்காக ஒரு படத்தைச் செய்து தருகிறேன் எனக் கூறியது ... லையில் தற்போது வந்த தகவலின்படி சிவாஜி தயாரிப்பு நிறு... இளைய தளபதி விஜய்புடன் கைக்கோர்க்கவுள்ளதாக கிசுகிச...

# எப்படி சேதுபதி?

சேதுபதி படம் இன்று உலகம் முழுவதும் வெளிவந்துள்ளது. ஒரு சில இடங்களில் இந்தப்படம் 9 மணிக் காட்சிகளே தொடங்கி விட்டது. நானும் ரவுடி தான் படத்துக்குப் பிறகு மீண்டும் ஒரு வெற்றிப்படம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் விஜய் சேதுபதி உள்ளார்.இதுவரை ரசிகர்கள் கூறிய தகவலின்படி, கண்டிப்பாக இந்தப்படமும் விஜய் சேதுபதிக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுக்கும். மேலும் இந்தப்படம் ஒரு நல்லகுடும்பப் பாங்கான படம் என சமுக வலைத்தளங்களில் கூறி வருகின்றனர்.



# எடையைக் குறை... கொம்பன்

மலருக்காக எடையைக் குறைக்கும் கொம்பன் கார்த்திக். காதல் கண்மணி படத்துக்குப் பிறகு மீண்டும் பழைய நிலைக்கு வந்து விட்டார் இயக்குநர் மணிரத்னம்.இந்தப் படத்துக்குப் பிறகு மீண்டும் இளம் நடிகர்களுடன் கை கோர்ப்பதாக கூறப்பட்டது.துல்கர் சல்மான், நானி, கார்த்தி எனப் பல பெயர் அடிபட கடைசியாக கார்த்தி தான் நடிக்கிறார் என உறுதியாகியுள்ளது. இப்படத்தில் கார்த்திக்கு ஜோடியாக பிரேமம் சாய்பல்லவி நடிக்கவுள்ளார். இந்தப் படத்துக்காக கொம்பன் கார்த்தி உடல் எடையை குறைக்கவுள்ளாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூர்யாவின் அடுத்த படம்





சூர்யா தற்போது 24 மற்றும் சூ3 ஆகிய படங்களில் நடித்து வருகிற... இந்தப்படங்கள் முடிந்த கையோடு மிருதன் பட இயக்குநர் சக்தி செ... ராஜன் இயக்கத்தில் ஒரு படத்... நடிக்கவுள்ளாராம். சமீபத்தி... இயக்குநர் கூறிய கதை ஒ... சூர்யாவை மிகவும் கவர்ந்... பற்றி முன்னணி தயாரிப்பு நி... ஒன்று சூர்யாவுடன் இணைந்... தெரிகின்றது.



# விரைவில் திருமணம்

பாகுபலி-2, தர்மதுரை, ஜீவாவின் புதிய படம் எனத் தமிழில் தீவிரமாக நடித்து வருகின்றார் தமன்னா. இந்த நிலையில் இவர் திரையுலகில் ஹிம்மத்வாலா, ஹம்சகல்ஸ் என்ற படத்தில் நடித்தார். இந்தப் படத்தை இயக்கிய இயக்குநர் சாஜி... கானுடன் இவர் காதலில் விழுந்ததாகவும், இருவருக்கும் விரைவில் திருமணம் நடக்கவிருப்பதாகவும் கிசுகிசுக்கப்பட்டது.

இது குறித்து தமன்னா கூறுகையில் நான் யாரையும் தற்போதைக்குத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தில் இல்லை என கூறியுள்ளார். இருந்தாலும் திரையுலக ஊடகங்களில் தற்போது இது தான் பிரதான செய்தியாக இ...கின்றது.

## ...நிறுவனம்

...னங்கள் அனைத்தும் தயாரிக்க
...லயில் சூ...ர் ஸ்டாருடன்
...ந்தை கொடுத்த தயாரிப்பு

...அஜித் நடிப்பில் அசல்,
..., அஜித்தே மீண்டும் உங்
...கூறியது தனிக்கதை. இந்தநி
...ரிப்பு நிறுவனம். அடுத்து
...ாக கிசுகிசுக்கப்படுகின்றது.

## ...றைக்கும்



...ாக
...றைக்கும்
...த்திக்.
...ரி
...ரகு
...நர்
...நப்
...கு
...க
...கர்
...டசி
...ி.
...க்கு
...தப்

# மிருதனின் முதல் நாள் வசூல்

உலகம் முழுவதும் மிருதன் 1000 திரையரங்குகளில் வெளிவந்துள்ளது. இந்தப் படத்துக்கு பிரமாண்ட வரவேற்புக் கிடைத்துள்ளது.இதைத் தொடர்ந்து இந்தப் படம் இதற்கு முன் வந்த அத்தனை ஜெயம் ரவி படங்களின் வசூல் சாதனைகளையும் முறியடித்துள்ளது. இந்தப்படம் இந்தியாவில் மட்டும் முதல் நாள் ரு 7.35 கோடி வசூல் செய்ததாக கூறப்படுகின்றது.தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்கள் சிலரின் நடிப்பில் கடைசியாக வந்த படங்கள் கூட இத்தனை வசூலை எட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் ஜெயம் ரவி தன் திரைப்பயணத்தில் அடுத்த கட்டத்தை எட்டியுள்ளார். எனினும் இது குறித்து அதிகார பூர்வ அறிவிப்பு இன்னும் வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கு காய்ச்சலா சரியான கவனிப்பு அவசியம்

**பா.செல்வராஜன்**
**மருத்துவர்**

மழைக்காலத்தில் நாம் கண்டு பயப்படும் இன்னொரு நோய் டெங்கு காய்ச்சல். அறுபதுகளின் துவக்கத்தில் 'டிங்கி' ஜுரம்' என அறிமுகமான இந்த நோய் வந்த காலப்பகுதியில்தான் "ஸ்டவ் ஜோசியம்" என்பதும் அறிமுகமானது. 'டிங்கி' என்ற பெயரால் பல நகைச்சுவைத் துணுக்குகள் உருவாயின. ஆனால், அதன் சரியான பெயர் 'டெங்கு' என்பதே.

இந்த நோய் ஏற்படக் காரணமாக உள்ளது டெங்கு நுண்ணியே. (நுண்ணி என்பது வைரஸ்தான்.... தமிழ்மொழி பெயர்ப்பாளர்கள் நுண்கிருமி என்றால் பாக்டீரியா, அதிநுண்கிருமி என்பது வைரஸ் அதாவது நுண்ணி என்கிறார்கள்)

இவை ஊன்நீர் வகைகளாகப் (Serotypes) பிரித்தால் நான்கு வகைப்படும். அதில் என்ன விசேஷம் என்கிறீர்களா? அதைப் பிறகு சொல்கிறேன். இவை வயது, பால், இனம் ஆகிய வேறுபாடு பார்க்காமல் எல்லோரையும் ஒன்றாகத் தாக்கும்.

இவற்றைப் பரப்பும் கொசுக்களை 'ஈடஸ் ஈஜிப்டை' என்கிறார்கள். இவை பகல் நேரத்தில் கடிப்பவை. அதனால் நமக்குத் தெரியும். மழை நீரில் அல்லது குளிர்சாதனப் பெட்டி , ஏ.சி ஆகியவற்றில் தேங்கும் சிறிதளவு நீரில்கூட கொசுக்கள் முட்டையிட்டுப் பெருகிவிடும். நகர்ப்புறங்களில் சிறு பாத்திரங்களில் இவை பெருகி, நோயைப் பரப்புகின்றன.

சாதாரணமாக, மருத்துவர்களிடம் காய்ச்சல் என்று போனால் மழைக் காலத்தில் இதெல்லாம் வைரஸ் காய்ச்சல் (viral fever)" என்பார்கள். அதுக்குப் போய் பரிசோதனை எல்லாம் பண்ண வேண்டாம்.... போய் மாத்திரை சாப்பிட்டு ஓய்வு எடுங்கள்" என்பார்கள்

அந்த வைரஸ் காய்ச்சல் தான் டெங்கு. பொதுவாக ஒரு நாள் காய்ச்சலுக்கே, என்ன சோதனை செய்யலாம் என வரைமுறைகள் உள்ளன. நம் ஊரில் எதுக்கும் எல்லாம் பாத்துக்கொள்ளலாமே, டாக்டர்" என்று நோயாளிகள் தாமே முடிவு செய்வது தவறு.

முதல் நாள் காய்ச்சலில் ஒரே ஒரு சோதனை போதும். (உச்சி முதல் பாதம் வரை மருத்துவர் சோதித்தாலே பல முறை காரணம் புரியலாம்). குளிர் அல்லது கடுமையான தலைவலி ஏற்பட்டால் மலேரியா உள்ளதா எனச் சோதிக்கலாம். அது ஒன்று மட்டுமே சாதகமாக இருக்கக் கூடும்.

டெங்குதானா என உறுதி செய்வது, அவசியமற்றது. அதற்கெனப் பணம் செலவழிப்பது வீண். ஏனெனில், டெங்கு காய்ச்சலுக்கென தனிப்பட்ட மருந்துகள் ஏதும் கிடையாது. வெறும் பக்கபலம் தரும் சிகிச்சை மட்டுமே போதும். மேலும் 15 வயதுக்குட்பட்டோருக்கு மட்டுமே அதிலும் 5% க்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே உயிருக்குத் தீங்கு ஏற்படும் அளவு பாதிப்பு ஏற்படலாம்.

### நோய்க் குறிகள்:

1) நோய்த் தடுப்பாற்றல் இல்லாதவர்களிடம் ஏற்படுவதை (classic dengue) "முறையான டெங்கு" என்கிறார்கள். இந்த நோய் வெளிநாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்து தங்கும் இளவயதினரையும் குழந்தைகளையும் தாக்குவது. உடலில் நுண்ணி புகுந்து 58 நாட்கள் சும்மா இருந்து, பிறகு கண்ணீர்க் கசிவு, தடிமன் போல், தசை வலி, மூட்டு வலி மற்றும் எலும்பு வலி ஆகியன இராது.

சோதித்துப் பார்க்கையில் 38.30 to 40.60 ($101^0$F $105^0$F) காய்ச்சல், உள் நாக்கும் தொண்டையும் சிவந்த நிலை தவிர, நிணநீர் முண்டுகள் மற்றும் கல்லீரல் வீங்கியிருப்பது தெரிய வரும்.

துவக்க நிலையை அடுத்து, உடல் நிலை வெகு துரிதமாக மோசமடையும். உடல் சோர்வு மிகவும் அதிகரிக்கும். கை

(22 ஆம் பக்கம் பார்க்க)

சிவந்து காணப்பட்டாலும், இவை சில நாள்களில் மறைந்து விடும். அதன் பிறகு, தடித்த அல்லது சிறு கொப்பளங்க ளோடு தோல் சிவக்கலாம். இவை 35 நாள்களில் தோன்றி, உடல் முழுவதும் பரவலாம்.

23 நாள்களில் காய்ச்சல் குறைந்து இயல்பு நிலைக்குத் திரும்பிடக் கூடும். மற்ற நோய்க்குறிகள் அனைத்தும் மறைந்து போய் விடும்.

ஆனால், அனைத்துமே 23 நாட்களில் மறுபடியும் வந்து விடும்.

இது டெங்கு காய்ச்சலின் தனிப்பட்ட குணநலன் ஆகும்.

அதிர்ஷ்டவசமாக, இத்தகைய classic dengue அதிகம் காணப்படுவதில்லை. நோய்க்குப் பிறகு, பல வாரங்களுக்கு உடல் சோர்வு நீடிக்கும்.

2) இரண்டாவது வகை, சற்றுக் கடுமை குறைந்த நோய் வகையாகும். இதில் காய்ச்சல், பசியின்மை தலைவலி மற்றும் உடல்வலி ஆகியன இருக்கும். லேசான தோல் சிவத்தல் காணப்படும். நிணநீர் முண்டுகள் பாதிப்படைவதில்லை. 3 நாள்களில் உடல் முழுவதும் தேறிவிடும். (நம் ஊரில் காணும் வைரஸ் காய்ச்சல்' இந்த வகையைச் சேர்ந்ததுதான்).

3) இவற்றையெல்லாம் விட அச்சுறுத்தும் ஒன்று டெங்கு குருதிக் கசிவு காய்ச்சல்' (dengue hemorrhagic fever) எனப்படும் மூன்றாவது வகையாகும்.

இதைப்பார்த்துத்தான் நாம் மிரண்டு போகிறோம். (தண்ணீர்ப் பாம்புகளைக் கூட நாக பாம்பு என அடித்துக் கொல்வதும் அலறி ஓடுவதும் போல்தான் இது).

இது குழந்தைகளை, அதாவது 15 வயதிற்குட்பட்டவர்களை மட்டுமே பாதிக்கிறது. இருபாலரையும் ஒரே அளவில் தாக்குகிறது.

### நோய்க்குறிகள்:


துவக்க நிலையில் காய்ச்சல், தொண்டை வலி, தலைவலி, பசியின்மை, குமட்டல், வாந்தி மற்றும் கடுமையான வயிற்றுவலி ஆகியன ஏற்படும். 24 நாட்கள் வரை இது நீடிக்கும். ஆனால், classic dengue என வேலை காட்டும். இதற்குச் சில மணி நேரங்கள் கழித்துத் திடீரென உடம்பை முறிக்கும் வலி, கண்களின் பின்புறத்தில் வலி, பொறுக்க முடியாத தலைவலி மற்றும் கால், கை மூட்டுகளில் வலி ஆகியன ஏற்படும்.

உடல் அசைவினால் தலைவலி கூடும். சிலருக்கு வெளிச்சத்தையே பார்க்க முடியாத அளவு கண்கள் கூசலாம். உடல் நடுக்கமும் குளிரும் சற்றுத் தாமதமாக வரலாம். இவை தவிர, தூக்கம் வராமலும், பசி இன்றி வாய் கசந்து போய், உடல் பலவீனம் அடைந்து அவதிப்படவும் நேரும். கால்வாசிப் பேருக்குத் தொண்டையி லும், மூக்கிலும் அழற்சி ஏற்படும்.

**முக்கியமான விஷயம்:** டெங்கு காய்ச்சலின்போது இருமல் மட்டும் வருவதே இல்லை.

மருத்துவச் சோதனையின் போது, கண்கோளங்களைத் தொட்டால் வலி ஏற்படுவது தெரியும். உடலில் ஆங்காங்கே நிணநீர் முண்டுகள் வீக்கமுற்றுக் காணப்படும்.


பாதி பேருக்கு, நாக்கின் பின்புறம் சிறிய வேர்க்குரு போன்ற குமிழ்கள் ஏற்படும். நாக்கின் மேல் மாவு போன்ற கோழைப் படிந்திருக்கும். மார்பிலும், கரங்களின் உட்பகுதிகளிலும் தோல்



**சீனாவில் மா சே துங் ஆட்சி துவங்கியபோது கொசுக்கள், பூச்சிகள், எலிகள் இவற்றைக் கொல்வது நம் தலையாய கடமை என்றவுடன், மக்கள் வெளுத்து வாங்கியதில், சுற்றுச் சூழல் சமநிலை இழப்பே (Ecological imbalance) வந்து விட்டது என்கிறார்கள். அந்த அளவு இல்லா விட்டாலும், கொஞ்சமாவது நாம் செயல்படலாம்... என்ன சொல்றீங்க?...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரோடி பரஞ்சோதியார் சொல்லுறார் கேளுங்கோ...



- முத்தமிழன்

எல்லோருக்கும் வணக்கம்

நான் தான் பாருங்கோ ஊரோடி பரஞ்சோதியார் வந்திருக்கிறன்.. இந்த முறையும் ஒரு நல்ல விசயத்தோடதான் வந்திருக்கிறேன்...

ம்.. ம்.. இப்ப உலகம் நவீன யுகத்துக்கை புகுந்து சுத்துது. அது உங்களுக்கும் தெரியும்.. நான் பழசுதான் பல்லுப்போனாலும் என்ர சொல்லு போகேல்லைப் பாருங்கோ.. உங்கட வீடுகளிலையும் என்னைப் போல பழசுகள் இருப்பினம். பழசுகள் சொல்லுறது இப்ப உங்களுக்கு அலட்டலாத்தான் தெரியும்... ஆனா அதில விசயம் இருக்கெண்டு இப்ப உங்களுக்குத் தெரியாது.. நீங்களும் நாலு பிள்ளையைப் பெத்து வளத்துப் பார்த்தால்தான் அது உங்களுக்கு விளங்கும்... சரி சரி.. விசயத்துக்கு வருவம்...

இந்த நவீன காலத்தில கையில ரெலிபோன் இல்லாத மனிசரே இல்லை எண்டுதான் சொல்லவேணும்... பாடசாலைச் சிறுமி தொடக்கம் பல்லுப்போன பாட்டிவரை எல்லாற்றை கையிலையும் போன்தான்... விறாந்தேக்கை நிண்டு குசினிக்கை நிக்கிற பிள்ளையோடையும் இப்ப போனிலதான் கதைக்குதுகள் பாருங்கோ... போன் இல்லாதவன் பிணம் எண்டு ஆகிப்போச்சுது இந்தக் காலம்.

ம்.. ம்..



போன் வைச்சிருக்கிறது நல்லதுதான்... நன்மையா பாவிச்சா நன்மை; தீமையாப் பாவிச்சால் தீமை.. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாப் போடும் பாருங்கோ... ஆனால் பாருங்கோ அந்தக் காலத்தில எங்களிட்டை உந்தப் போன் இல்லப்பாருங்கோ... நாங்களும் சீவியம் நடத்தினாங்கள்தான்... கடிதத்தில உறவுகளைப் பகிர்ந்து கொண்டம்.. ஏதும் காசு பணம் அனுப்புறதெண்டா காசுக்கட்டையில அனுப்பினம்.. அப்ப மூளைக்கு நல்ல வேலை... இப்பத்தே பிள்ளையளுக்கு கடிதம் எழுதவே தெரியாது... அதுமட்டுமில்லை வாசிக்கிற அளவுக்குப் பொறுமையும் இல்லைப் பாருங்கோ... எதுக்கெடுத்தாலும் உந்தப்போனை காதுக்கை வைக்க வேண்டியது.. மணித்தியாலக் கணக்கில.. கதை கதை யெண்டு கதைச்சு நேரத்தையும் வீணாக்கி காசையும் கரியாக்கி சிலபேர் வீண் சோலியளையும் தலையில தூக்கிப் போட்டிட்டுப் படாத பாடு படுதுகள் காலமை ஆறுமணிக்கு போனை காதுக்கை வைச்சான் எண்டால் சாமம் பன்னிரண்டு மணி ஆகினாலும் விடவே மாட்டான் பாருங்கோ...

யாரையும் குறைபிடிக்க வேணுமெண்டு குத்திக்காட்ட வேணுமெண்டு சொல்லேல்லைப் பாருங்கோ... ரெலிபோன் உண்மையா மனிசனுக்கு நல்ல உதவி செய்யுதுதான். அதை நான் மறுக்கேல்லை. முந்தி ஒரு வெளி நாட்டில நிக்கிற பிள்ளைக்கு கடிதம் போட்டா அது போச்சேந்து பதில்வர ஆறு ஏழுமாதம் செல்லும்... இப்ப லேசான அலுவல் உடன் காதோட காதா சுகநலம் விசாரிக்க நல்ல வசதி பாருங்கோ. ஆனா என்ரை பேரப்பெடி போன் கதைக்கிறதையே தொழிலா செய்யிறான் பாருங்கோ..

ஏதோ ஒரு கன்றாவி கெற்போனாம் அதையும் காதுக்கை கொழுவிப்போட்டுத்தான் படுக்கையிலையும் சரி, நடக்கையிலும் சரி, எப்ப பாத்தாலும் போன் போன் எண்டு அவன்ரை காலம் போனோட போகுது.. பாருங்கோ... நாங்கள் அவனுக்கு ஏதும் சொன்னால் அவனுக்கு கேளாது..

அவனைப் பாத்தா எனக்கு என்ரை பழைய கூட்டாளி ஒராளின்ர ஞாபகம்தான் வாறது பாருங்கோ.... அவருக்கு கேட்கிற புலன் குறைவு.. அவர் காதுக்கை போன்தான் பூட்டி இருக்கிறவர். .. அது புலன் குறைஞ்சதுக்கு அவர் பூட்டினவர்.. ஆனா இப்ப என்ரைபேரன்.. கடவுள் குடுத்த கேட்கிற புலனைத் தன்னால பாழாக்க உந்த செல்போனை அல்லோ போட்டு மற்றாக்கள் கதைக்கிறது விளங்காமல் திரியிறான் பாருங்கோ..

முந்தின காலத்தில் ஏன் இப்பவும் எனக்குச் சாப்பாடு வந்தா சாப்பிட முதல் கடவுளை வணங்கிப்போட்டு காலில செருப்புக்கிடந்தாலும் அதை அங்கால கழட்டி வைச்சுப்போட்டுத்தான் சாப்பாட்டுக்கு மதிப்புக்குடுத்து சாப்பாட்டை ரசிச்சு ருசிச்சி சாப்பிடுவன்.. என்ரை பேரன் இருக்கிறான்... சாப்பாடு



சாப்பிடேக்கையும் ஏதோ போனில கதைச்சுக்கொண்டுதான் சாப்பிடுறான். சாப்பாட்டுக்கை கல்லுக்கிடந்தாலும் தெரியாது.. தொண்டேக்கை முள்ளுப் போனாலும் தெரியாது..என்ரை பேரன் மட்டுமே? பலபேற்ற வாழ்க்கை இப்ப உப்பிடித்தான் போகுது..

அண்டைக் கொரு செய்தி படிச்சன் போன் கதைச்சுக் கொண்டு மோட்டச் சைக் கிளிலை போன குடும் பஸ்தர்.. வீட்டை போய்ச் சேரமுதல் பரலோகம் போனவராம்.. அதுக்கிடையில சிலபேர் உந்த மிஸ்சுக்கோலப் பின்தொடர்ந்து விசுக்கோத்தாப் போன சம்பவங்களும் பல இடத்தில நடக்குது பாருங்கோ...

மிஸ்சுக்கோல பின்தொடர்ந்து அது காதலா அரும்பி கடசியில கலியாணத்தில முடிச்சு முன்னபின்ன அறியாதவள, அறியாதவன, கலியாணம் முடிச்சு ஒண்டு ரண்ட பிள்ளையளப் பெத்துப்போட்டு.. அதுக்குப் பிறகு பிரிஞ்சு போன எத்தனை பெடி பெட்டையளின்ர கண்ணீர்க்கதையக் கேட்டு நானும் கண்ணீர் விட்டிருக்கிறன் பாருங்கோ.. ஏன் இந்த வில்லங்கம்?

ரெலிபோனில குரலைக் கேக்க இதமாத்தான் இருக்கும் பாருங்கோ... அது குடும்ப வாழ்க்கைக்கு சரிவருமே...

சில சினிமா படங்களில ரெலிபோன் காதல மையப்படுத்தி நடிச்சுத் துலைக்கிறாங்கள்... அது எங்கட நடைமுறை வாழ்க்கைக்குச் சரிவருமே.. முன்ன நாங்கள் ஒரு பெண் பாக்கிறதெண்டாலும் சரி, மாப்பிளை பாக்கிறதெண்டாலும் சரி... நாலு இடத்தில விசாரிச்சு அறிஞ்சு தெரிஞ்சுதான் கலியாணம் கட்டிவைப்பம்... ம்... ம்.. நாலு பெரிய மனிசர் செய்யிற நல்ல வேலையை உந்தப் போனைக் கொண்டு நடத்திப்பாத்தா.. சரி வருமே.. வாழ்க்கை எண்டுறது வாழத்தான்; அழிய இல்லைப் பாருங்கோ.. என்ரை பேரனும் ஏதோ எக்கச் சக்கமான காசு பணத்தை நீலோட் போட்டு அழிச்சவனாமெண்டு இப்ப கொஞ்ச நாளுக்கு முதல்லதான் பொடியள் சொல்லக்கேட்டன்..

...ஐயோ கடவுளே... ஏன் இந்த வீண்வம்பு.. நவீன உலகத்த நாங்கள் நல்லதுக்குப் பாவிச்சா அது நன்மைதான் தரும்.. தீமைக்குப் பாவிச்சமோ அதால நாங்கள்தான் அழிஞ்சு போடுவம்.. கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும் கண்ட நிண்ட ஆக்களோட போன் கதைச் சதாலையும் பல குடும்பங்களில சூறாவளி சுழண்டடிக்குது... எதுக்கும் நான் சொல்லுறத நீங்கள் எப்பிடி எடுக்கிறியளோ எனக்குத்தெரியாது.. நல்லதா எடுத்தா உங்களுக்குத்தான் நன்மை... அப்பநான் போட்டுவாறன்..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லீரலை காக்கும் கறிவேப்பிலை

உணவில் நறுமணத்துக்காகவும், சுவைக்காகவும் சேர்க்கப்படும் கறிவேப்பிலையை, நாம் தூக்கி எறிந்து விடுவோம். ஆனால் அந்த கறிவேப்பிலையை தினமும், காலையில் வெறும் வயிற்றில் பச்சையாக சாப்பிட்டு வந்தால், ஏராளமான நன்மைகள் கிடைக்கின்றன.

கறிவேப்பிலையில் வைட்டமின் ஏ, விற்றமின் பி, விற்றமின் பி2, விற்றமின் சி, கல்சியம் மற்றும் இரும்புச்சத்து போன்றவை நிறைந்துள்ளன. கறிவேப்பிலை, முடியின் வளர்ச்சிக்கு நல்லது என்று பலர் சொல்ல கேட்டிருப்போம்.



ஆனால் அதனை பச்சையாக தினமும், காலையில் சாப்பிடு வதால் கிடைக்கும் நன்மைகள் பல உள்ளன.

அதிலும் இதனை தொடர்ந்து, 120 நாள்கள் சாப்பிட்டு வந்தால், கொழுப்புக்கரையும். காலையில் வெறும் வயிற்றில்,15 கறிவேப்பிலை இலையை உட்கொண்டு வந்தால், வயிற்றைச் சுற்றியுள்ள அதிகபடியான கொழுப்புக்கள் கரைந்து, அழகான மற்றும் எடுப்பான இடையைப் பெறலாம். ரத்த சோகை உள்ளவர்கள்,

காலையில் ஒரு பேரிச்சம்பழத்துடன், சிறிது கறிவேப்பிலையை உட்கொண்டு வந்தால், உடலில் ரத்த சிவப்பணுக்களின் அளவு அதிகரித்து, ரத்தசோகை நீங்கும்.

சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், தினமும் காலையில் கறிவேப்பிலையை பச்சையாக உட்கொண்டு வந்தால், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு சீராக இருக்கும். கறிவேப்பிலை உடலில் தேங்கியுள்ள கெட்ட கொழுப்புக்களைக் கரைப் பதோடு, நல்ல கொழுப்புக்களை அதிகரித்து, இதயநோய் போன்ற பிரச்சினையிலிருந்து நல்ல பாதுகாப்புத் தரும்.

நீண்ட நாள்கள் செரிமானப் பிரச்சினையைச் சந்தித்து வருபவர்கள், அதிகாலையில் வெறும் வயிற்றில்,15 கறிவேப்பிலையை மென்று சாப்பிட்டால், செரிமான பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம்.



## மூட்டுவலி போக்கும் இயற்கை வைத்தியம்

■ சுக்கை நன்றாக அரைத்துக் கொதிக்க வைத்துத் தினமும் காலை மாலை இரண்டு வேளையும் மூட்டுகளில் பத்து போடவும்.

■ கசகசா, துத்தி இலை இரண்டையும் சேர்த்து விழுதாக அரைத்து, கால் மூட்டுகளில் தடவினால் மூட்டு வலி குறையும்.

■ முடக்கற்றான் இலைகளைஅரைத்து மூட்டு வலி உள்ள இடங் களில் பூசி வந்தால் மூட்டு வலி குறையும்.

■ வேப்ப எண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை சமஅளவு எடுத்து சூடாக்கி மூட்டுவலியுள்ள இடத்தில் தடவ வலி குறையும்.

■ நொச்சி இலைச் சாறை கட்டியாக எடுத்து மூட்டுவலி உள்ள இடத்தில் பூசினால் மூட்டு வலி குறையும்.

■ நொச்சி இலை, உத்தாமணி இலையை வதக்கி ஒத்தடம் கொடுத்தால் மூட்டுவலி குறையும்.

■ கருநொச்சி இலைகளை நறுக்கி, உப்பு சேர்த்து வதக்கி மூட்டு வலி மற்றும் வாதவலி மேல் கட்டி வந்தால் வலி குறையும்.

■ அழிஞ்சில் இலைகளைத் துண்டுகளாக நறுக்கி, வதக்கி இளஞ் சூடாக மூட்டு வலி மேல் ஒத்தடம் கொடுத்தால் வலி குறையும்.

■ வில்வ மர இளந்தளிரை வதக்கி இளம் சூட்டோடு மூட்டுகளின் மீது ஒத்தடம் கொடுக்கலாம்.

■ கடுகு எண்ணெயில் வெங்காய சாற்றை சிறிதளவு கலந்து வலி உள்ள இடத்தில் தடவி வர மூட்டுவலி குறையும்.

■ பருத்தி இலைகளை விளக்கெண்ணெயில் வதக்கி மூட்டுகளில் கட்டி வந்தால் மூட்டுவலி குறையும்.

■ புங்கன் இலைகளை நீரிலிட்டுக் காய்ச்சி, இந்நீரால் மூட்டுவலி ஏற்பட்ட இடத்தைக் கழுவி வந்தால் மூட்டுவலி குறையும்.

# பகடைக்காய்களாகும்.....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதும், அமெரிக்க உளவுத்துறையான சிஐஏ குர்திஷ் மக்களையும் சதாமிற்கு எதிராகப் போர் செய்ய வேண்டிக் கொண்டது. மீண்டும் குர்திஷ் மக்கள் அமெரிக்காவுடன் இணைந்து போராடினார்கள். மீண்டும் பெரிய அளவில் இனக் கொலைக்கு உள்ளானார்கள். 2008 ஆம் ஆண்டு துருக்கியப் படைகள் ஈராக்கின் எல்லை தாண்டிச் சென்று குர்திஷ் மக்களை வேட்டையாடிய போது குர்திஷ் போராளிகள் தொடர்பாக வும் அவர்களது நிலைகள் தொடர்பாக வும் தேவையான தகவல்களை சிஐஏ துருக்கிக்கு வழங்கியது. .

### குர்திஷ் அமைப்புக்கள்

1. பிகேகே (PKK) - இது துருக்கியில் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியின் போராளி அமைப்பு. 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தீவிர இடது சாரிக் கொள்கையைக் தொழிலாளர் கட்சி துருக்கிய அரசுக்கு எதிராக கரந்தடிப் போரைச் செய்து கொண்டிருக்கின்றது.
2. வைபிஜி/ வைபிஜே (YPG/YPJ) - இவை இரண்டும் சிரியாவில் செயற்படும் மக்களாட்சி ஐக்கியக் கட்சியின் போராளிப் பிரிவுகளாகும். YPG ஆண் போராளிகளையும் YPJ பெண் போராளிகளையும் கொண்டவை. YPJதான் எல்லாக் குர்திஷ் போராளி அமைப்புகளிலும் போரிடும் திறன் மிக்கது. இது சிரியாவின் தனது கட்டுப்பாட்டின் கீழ் ஒரு நிலப்பரப்பை வைத்திருக்கின்றது. அமெரிக்காவுடன் இது இணைந்து செயற்படுகின்றது.
3. பெஷ்மேர்கா - இது 1920களில் இருந்து ஈராக்கில் உரிமைக்காகப் போராடிவரும் குர்திஷ் மக்களின் அமைப்பாகும். 2003ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகள் ஈராக்கை ஆக்கிரமித்த போது அவற்றுடன் பெஷ்மேர்கா இணைந்து போராடியது. தற்போது இது ஈராக்கில் பெரு நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்து ஒரு நிழல் அரசை நடாத்தி வருகின்றது.




### மீண்டும் குர்திஷ் மக்களும் தமிழர்கள் போலவே

2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரித்தானியப் பத்திரிகையான தி இண்டிப்பெண்டென்றில் ஒவ்வொரு பிராந்திய அரசுகளும் குர்திஷ் மக்களுக்குத் துரோக மிழைத்தன என்னும் தலைப்பில் ரொபேர்ட் பிஸ்க் எழுதிய கட்டுரையின் முதல் வரி குர்திஷ் மக்கள் துரோகம் இழைக்கப்படுவதற்குப் பிறந்தவர்கள் என அமைந்தது.

Syrian Kurdish Democratic Union Party (PYD) இன் படைப்பிரிவான YPG அலேப்பே நகரில் நிலப்பரப்புகளைக் கைப்பற்றுகின்றார்கள் என்பதால் துருக்கி 2016 ஆம் பெப்ரவரி 16 ஆம் திகதி அவர்களின் நிலைகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது. மறுதினம் துருக்கியில் குண்டு வெடிப்புக்கள் நடந்தன அது குர்திஷ் பயங்கரவாதிகளின் செயல் என்றார் துருக்கியத் தலைமை அமைச்சர். ஈழ மக்களின் போராட்டத்தைப் பற்றி அறிந்தவர்கள் குண்டு வெடிப்பை யார் செய்திருப்பார்கள் என்பதை இலகுவாக ஊகித்து அறிந்து கொள்வார்கள். ஓர் இனம் இன்னொரு நாட்டினுள் தனக்கு என ஒரு நிலப்பரப்பை வைத்திருக்கும் போது இன்னும் ஒரு நாடு ஏன் இப்படி நடந்து கொள்கின்றது என்பதற்கான விடையையும் ஈழப் போராட்டத்தையும் அமைதிப் படையின் செயற்பாட்டையும் அறிந்தவர்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்வார்கள்.

### அமெரிக்காவின் பொறுப்பாகும்

தற்போது உள்ள சூழ்நிலையில் துருக்கிக்கும் குர்திஷ் மக்களுக்கும் இடையில் ஒரு சமரசத்தைச் செய்து வைக்க அமெரிக்காவால் மட்டுமே முடியும். அமெரிக்காவுடன் குர்திஷ் மக்கள் இணைந்து போராடுவத்தால் அது அமெரிக்காவின் பொறுப்பாகும். ஆனால் அமெரிக்கா யாரையும் நண்பனாகக் கருதுவதில்லை 1970இல் அமெரிக்கா ஈராக்கில் குர்திஷ் மக்களின் கால்களை வாரியபோது அதன் நியாயத் தன்மையைப் பற்றி கேள்வி கேட்ட போது ஹென்றி கிஸ்ஸிங்கர் சொன்ன பதில்: இரகசிய நிலக்கீழ் படை நடவடிக்கை வேறு; மதப்பரப்பு (missionary) நடவடிக்கைகள் வேறு என்றார். தற்போது ரஷ்யா குர்திஷ் போராளிகளைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றது. ஐக்கிய அமெரிக்கா அவ்வப் போது துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகின்றது. இறுதியில் அவர்கள் பலிக்கடா ஆக்கப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்குப் பாதுகாப்பானதா இந்த உலகம்?

கடந்த காலங்களில் நம்மை வெட்கப்படவும் வேதனைப் படவும் வைத்த நிகழ்வுகளில் ஒன்று, பெண்கள் மீதான பாலியல் வன்முறை நிகழ்வைக் குறித்த விவாதங்களில் குற்றம் இழைத் தவர்களுக்கு பதிலாகப் பாதிக்கப் பட்ட பெண்களையே குற்றவாளி கூண்டில் ஏற்றும் அநீதிதான்.

ஒரு பெண் வன்முறைக்கு ஆளாகிவிட்டால் போதும். உடனே ஆயிரக்கணக்கான கேள்விக் கணைகள் தொடுக்கப்படும். வன்முறை சம்பவம் எங்கு நடந்தது? அந்தப் பெண் யார்? எந்தச் சாதியைச் சார்ந்தவர்? என்ன உடை உடுத்தியிருந்தார்? அவருடன் இருந்தவர் யார்? சம்பவம் நடந்த நேரம் இரவா? பகலா? இதுபோன்ற கேள்விகள் எழுப்பப்படும். வன்முறைச் சம்பவம் ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் நிகழ்ந்தால் அங்கு இவளுக்குத் தனியாக என்ன வேலை? என்ற கேள்வி வேறு. சாதியில், பொருளாதாரத்தில் பின்தங்கியவராக அந்தப் பெண் இருந்தால் அவர் ஒழுக்கமானவராக இருக்க மாட்டார் என்ற தீர்மானம் உடனே நிறைவேறிவிடும். புடவையைத் தவிர எதை உடுத்தியிருந்தாலும், இப்படி உடை உடுத்தினால் ஆண்கள் சீண்டிப் பார்க்காமல் என்ன செய்வார்கள்? என்ற நியாயப்படுத்துதலும் நடக்கும்.

நிகழ்வின் போது உடன் இருந்தவன் ஆண் நண்பனோ, காதலனோ என்றால் கண்டவனோடு சுற்றினால் இப்படித்தான் நடக்கும் என்ற விமர்சனமும் நிச்சயம் உண்டு. இரவு நேரத்தில் நடந்தது என்றால், நேரம் கெட்ட நேரத்தில் இவளுக்கு வெளியில் என்ன வேலை என்ற கேள்வியும் கேட்கப்படும். எனவே இந்த நிலைமைக்கு சில காரணிகளும்ஆதிக்கம் செலுத்துகிறது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவற்றான சில காரணிகளை நோக்குவோம்.

### கேள்வி கேளுங்கள்

இங்கு நாம், நம் நாட்டின் நாகரிகம், பண்பாடு, பெண்ணைக் கடவுளாக, தாயாகப் போற்றும் வாழ்க்கைமுறை, ஒருவனுக்கு ஒருத்தி எனும் அறநெறி, கற்பு என்னும் கண்ணியம் இவை அனைத்தையும் கேள்விக்கு உள்ளாக்க வேண்டாமா?

நம் வீடுகளில் நாம் வளர்க்கும் ஆண்பிள்ளைகளின் இத்தகைய வன்முறைப் போக்கு நமக்குக் கவலை தர வேண்டும். இதற்கான காரணங்களை நாம் தேட வேண்டும்.

பெண்கள் இரவு வேளைகளில் வெளியே செல்லக் கூடாது. தக்க துணையின்றி தனியே செல்லக் கூடாது. சரியான உடைகளை உடுத்த வேண்டும். கண்டிப்பாகப் பெண்கள் தொலை பேசியைப் பயன்படுத்தக் கூடாது என்ற கட்டுப்பாடுகளை விதிப்பதே நிகழ்கிறது. இத்தகைய கட்டுப்பாடுகள் பெண் கல்வி, வேலைவாய்ப்புகள், பெண்ணுரிமை, சுதந்திரம் என அனைத்தையும் மறுக்கும். மேலும், இந்த அணுகுமுறை இந்தப் பிரச்சினைக்குப் பெண்கள்தான் காரணம் என்ற மாயையை உருவாக்கி, வன்முறையில் ஈடுபட்ட கயவர்கள், அதற்கான காரணங்கள் குறித்த ஆய்வையும் தடுக்கிறது.

சமூக சிந்தனையுள்ள ஒவ்வொருவரும், ஆண் ஏன் தனியாகவோ, குழுவாகவோ வன்முறையில் ஈடுபடுகிறான்? பெண்கள் மீதான பாலியல் வன்முறையில் ஒரு பெண்ணின் உடலைக் கடந்து அவளின் தன்னம்பிக்கை, சுதந்திரம், ஆளுமையென அனைத்தையும் அவன் சிதைக்கக் காரணம் என்ன? ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் சமுதாயத்தில், ஆணுக்கு எங்ஙனம் எதிரியாகிப் போனாள்? ஒரு பெண் குழந்தையைச் சிதைக்கும் வகையில் ஆணின் வக்கிரம் அதிகரித்து வருவது ஏன்? போன்ற கேள்விகளை எழுப்புவதும் அதற்கான விடைகளைத் தேடுவதுமே வன்முறையற்ற வாழ்வுக்கு உதவும்.

### சமத்துவம் இல்லை

இந்தச் சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து வாழ்ந்த போதிலும், பாகுபாடு இன்றி சமமாக வாழ்வது இல்லை. சாதிய அடுக்கில், ஒரு சாதியைச் சேர்ந்தவரைவிட இன்னொரு சாதியைச் சேர்ந்தவர் கீழானவராகக் கருதப்படுகிறாரோ, அவ்வாறே ஆண்களைவிடப் பெண்கள் கீழானவர்களாகவே கருதப்படுகின் றனர். பெண், ஆணுக்கு நிகராகக் கல்விகற்று, சரிசமமாக வேலை செய்வது, உடை உடுத்துவது, வாகனங்களை ஓட்டுவது, இரவில் நடமாடுவது என்பதெல்லாம் ஆணை எரிச்சல் அடையச் செய்கிறது. காலகாலமாகத் தனக்கு அடிமைப்பட்டு ஏவல்செய்த ஓர் இனத்தின் உரிமை வாழ்வு அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது. பெண்மீதான வன்முறைக்கு அவனைத் தூண்டுகிறது.

### ஊடகம் தரும் தூண்டுதல்

பாலியல் வக்கிரங்கள் நிகழ்வதற்கு ஊடகம், குறிப்பாக இணையம் பெரும் தூண்டுகோலாக இருக்கிறது. ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படும் பாலியல் வாழ்க்கை ஒரு அன்பின் வெளிப்பாடாக, கணவன் - மனைவி இடையே நிகழ்வதாக சித்திரிக்கப்படுவ தில்லை. பெரும்பாலும் அவை இயற் கைக்கு முரண்பட்டதாக, மிகைப்படுத் தப்பட்டதாக, வன்முறையுடன் கூடியதாகச் சித்திரிக்கப்படுகின்றன. இதன் விளைவாக இது தனது இயல்பு வாழ்க்கையில் சாத்தியமல்ல எனத் தெரிந்தவன் இதைப் பரீட்சித்துப் பார்க்க எதிர்த்துப் போராட இயலாத, தனித்து விடப்பட்டப் பெண்களை, குழந்தை களைத் தேர்வு செய்கிறான்.

இந்தச் சூழலில் நமக்கு எழும் கேள்வி, ஊடகத்தில் காட்டப்படும் பல்வேறு சாகச நிகழ்வுகளை முயற்சி செய்ய அஞ்சுபவன், பெண்ணை மட்டும் வல்லுறவு கொள்வது ஏன்? காரணம் சாகச விளையாட்டுகளில் அவனின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. ஆனால், ஒரு பெண்ணின் வாழ்வையே சீர்குலைத்து விட்டுச் சட்டத்தின் ஓட்டையில் அவன் எளிதாகத் தப்பி சுதந்திரமாக நடமாட முடியும்.

இந்தநிலை மாற, சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். தண்டனைக்கான வயது வரம்புகள் நீக்கப்பட வேண்டும். ஒரு குற்றவாளி கூடத் தப்பி விடாதபடி காவல்துறையும், நீதித்துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். குற்றங்களை வெளியில் வந்து பதிவு செய்யவும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவவும், பெண்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்-பெண் பாகுபாடுகள் களையப்பட்டு பாலின சமத்துவத்துக்கான முனைப்புகள் வீடு, பாடசாலை, வேலைத்தளம் என எங்கும் தொடங்கப்பட வேண்டும். ஆண் குழந்தைகள் வளர்ப்பிலும், அவர்களுக்கு அறிவுடன் அறநெறியைப் பயிற்றுவிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த உலகம் அனைவருக்கும் பாதுகாப்பானதாய், இனிதானதாய் இருக்க ஒவ்வொருவரும் பங்களிப்பு செய்வோம்.

இந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## புதைகுழிகளும் வாய்திறக்கும்

மறைந்து போன உயிர்களோடு
அன்று சாட்சிகளும் மறைந்து
போயிற்று
புதைந்து போன உடல்களோடு
அன்று உண்மைகளும் புதைந்து
போயிற்று
காணாமல் போனோரோடு
அன்று குற்றப்பத்திரிகையும்
காணாமல் போயிற்று

சுதந்திர நாடென்று சுடுகாட்டைக்
காட்டினர்
எதிர்த்தவரெல்லாம் மண்ணுக்குள்
புதைத்தனர்
வால்பிடித்தவர் எல்லாம் பல்லக்கில்
சென்றனர்
வெள்ளைத்தாளில் உண்மையை
எழுதியவர்களை
வெள்ளை வானுக்கு இரையாக்கினர்

புதைகுழிகளோடு கதறல்களும்
அவர்களின் கனவுகளும்
அடங்கிப் போனது
நீதி தேவதையும் கைகட்டப்பட்டாள்
உலகமே எதிர்த்தது இந்த
அராஜக அரசை
சந்தர்ப்பம் கிடைத்தது
தமிழர்கள் கையில்
வாக்காளர் வழங்கினர்
நல்லதொரு தீர்ப்பு

உறங்கிக் கிடந்த உண்மைகள் யாவும்
உயிர்பெறத் தொடங்கி விட்டது
மூடிவைத்த விசாரணைகள்
விஸ்வரூபம் எடுக்கிறது
சட்டம் தன் இருப்பிடம் திரும்புகிறது
வெந்தணல் நம் கண்ணீரில்
அணைகிறது
காத்திருந்த நீதி கதவைத் தட்டுகிறது

தமிழர் நமக்குக்
கிடைப்பது தான் என்ன?
இழந்தவை யாவும்
இழந்தவை தானே இருந்தும் நீதி
நிலைத்திட வேண்டும்
ஒருவரின் கொலைக்கு
ஒரு சிலர் சாட்சி விசாரணையும்
விரைவில் ஆரம்பம்
பல்லாயிரம் கொலைகளுக்கு
உலகமே சாட்சி
ஆனாலும் இங்கே விசாரணைகள்
ஏதும் இல்லை

நாமெல்லாம் வாயிருந்தும்
ஊமையாகி
யுகங்கள் பல கடந்து வந்து விட்டோம்
விசாரணையிலும் நாம்
சிறுபான்மையினர்
ஒதுக்கிய நிதியில் மட்டுமல்ல
நீதியிலும் நாம் புறம் தள்ளப்பட்டோம்
தனக்காக நீதியை தானே தேடிக்கொள்ள
இனி புதைகுழிகளும் வாய் திறக்கும்

- த.அஜந்தன்,
கந்தர்மடம்.



அன்னையின் மடியில்
தவழ்ந்த நாள்
தந்தையின் வேட்டியில்
தொட்டிலில் தூங்கிய நாள்!

மலர் மெத்தையில்
புரண்டு சிரித்த நாள்
மயில் தோகை விரித்து
விசிறி விட்ட நாள்!

பாடும் குயிலும்
பேசும் கிளியும்
இசைக்கும் வண்டும்
தாலாட்டிய நாள்!

தவழ்ந்து தாலாட்டி
புரண்டு சிரித்த
மறக்க முடியாத
என் பிறந்த நாள்!

பூ. சுப்ரமணியன்




## தொடரும்

காத்திருந்தேன் பலநாள்
உன் அழைப்புக்காக
தவமிருந்தேன் பலநாள்
உன் அன்புக்காக
மௌனமாயிருக்கிறேன்
பலவருடம்
உன் காதல் என்னோடு
தொடரனும் என்பதற்காக

யோ. யாழினி. பரந்தன்.



# நமக்கு நாமே நலம் காப்போம்

ஆரோக்கியம் என்பது சிவந்த நிறத்திலோ, கட்டுடலிலோ இல்லை. சில ஆரோக்கியமான பழக்க வழுங்கங்களைத் தவறாமல் கடைப்பிடித்தாலே போதும், உடலினை உறுதி செய்து, நோயின்றி வாழலாம். நாங்கள் ஆரோக்கியமான குடும்பம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு உங்களை நீங்களே தயார்ப்படுத்திக்கொள்ள உதவும் எளிய வழிகள் இங்கே...

### இறுக்கமான உடைகளைத் தவிர்க்கலாம்

இறுக்கமான ஜீன்ஸ், காற்றுப் புகாத உடைகள் அணிவதால், இனப்பெருக்க உறுப்புகள் பாதிக்கப்படலாம். வெப்பநிலை அதிகமாகி, குழந்தைப்பேறு பிரச்சினை வரலாம். பருவகாலத்துக்கு ஏற்ற உடைகள் அணியலாம். பொதுவாக, நம் தட்ப வெப்ப நிலைக்குப் பருத்தி ஆடைகள் சிறந்தவை.

### ஐந்து நாள்களுக்கு உடற்பயிற்சி

அரை மணி நேரம் வீதம், வாரத்துக்கு ஐந்து நாள்கள் கட்டாயம் உடற்பயிற்சி செய்யவேண்டும். இது உடலை சமநிலையில் வைத்திருக்க உதவுவதுடன், எல்லாவித ஆரோக்கியப் பிரச்சினைகளையும் தடுக்கும். கடினமான பயிற்சிகள் கூட வேண்டாம். நடை, நீச்சல், நடனம், மெது ஓட்டம் போன்றவற்றில் எது முடியுமோ, அதைத் தேர்ந்தெடுத்து அவசியமாகப் பழகுவது நல்லது.

### நற்பழக்கங்கள் தரும் நிரந்தர ஆரோக்கியம்!

காலை மற்றும் மதியம் அதிகமாக நீர் அருந்த வேண்டும். மாலை மற்றும் இரவில் குறைவாக நீர் அருந்த வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது உடலைச் சுத்தப்படுத்தும் சிகிச்சையை எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால், நச்சுக்கள், வயிற்றுப்பூச்சிகள் நீங்கும். நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

சாதாரண சளி, காய்ச்சல் ஆகியவற்றுக்கு உடனே மருந்துகளை உட்கொள்ள வேண்டாம். ஒரு நாள் கழித்தும் நீடித்தால், மருத்துவரிடம் செல்லலாம்.

மடமடவென நீர் குடிக்கும் பழக்கத்தை நிறுத்தி, மெதுவாகக் குடித்து, அவை உமிழ்நீருடன் கலந்து நீர் அருந்தும் பழக்கத்துக்கு மாறலாம். காலையில் வெறும் வயிற்றில் நீர் அருந்தும் பழக்கம் நல்லது.

வியர்வை வந்த உடனே முகம் கழுவுதல், குளித்தல் நல்லது அல்ல. அதுபோல, வெயிலில் அலைந்துவிட்டு வந்த உடனே வேகமாக நீர் குடிப்பதும் நல்லது அல்ல. ஏனெனில், சிலருக்கு தலைவலி, சளித்தொல்லை ஏற்படக்கூடும்.

மது மற்றும் புகைப்பழக்கத்தைக் கைவிட எந்தத் தயக்கமும் தேவை இல்லை. இது உயிரைக் குடிக்கும் பழக்கம் என்பதால், இப்போதே முடிவெடுப்பது நல்லது. மது மற்றும் புகைப் பழக்கத்தை நிறுத்தியவர்கள் தினமும் காய்ந்த திராட்சையை 20 கிராம் அளவுக்குச் சாப்பிட்டுவர, உடலில் உள்ள நச்சுக்கள் குறையும். நிக்கோட்டினின் தாக்கம் ஓரளவுக்குக் கட்டுப்படும். நச்சுக்கள் கலந்த ரத்தத்தை ஓரளவுக்குத் தூய்மைப்படுத்தும். அவசரமாக, உணவை மென்று விழுங்காமல், அரையும் குறையுமாக விழுங்கினால், சர்க்கரை நோயாளிகளுக்கு, உணவுக்குழாய் அடைத்துக்கொண்டு கூடுதல் தொல்லைகளைத் தரும்.

உணவில் உப்பைக் குறைத்துக்கொள்வது நல்லது. தூள் உப்பைவிட, கல் உப்பில் தேவையான சத்துக்கள் இருக்கும். எந்தக் காரணத்துக்காகவும் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. அந்த நாளுக்கான சக்தியைத் தருவது காலை உணவுதான்.

பால், மாதுளை, முருங்கைக் கீரை, பச்சைக் காய்கறிகள், பேரீச்சை ஆகியவை தூக்கத்தைத் தரும்.

இயர்போன்களை 20 நிமீடங்களுக்கு மேல் பயன்படுத்தக் கூடாது. ஒரு காதில் இயர்போன் வைத்து, மறுகாதில் இயர்போன் வைக்காமல் பேசலாம். செல்போனை ஒரே காதில்வைத்து நீண்ட நேரம் பேசக் கூடாது. வலது, இடது என மாற்றி மாற்றிப் பேசலாம். பற்றரி குறைவாக இருக்கும்போது செல்போன் பேசினால், அதிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சுகள் மூளை, கண்களைப் பாதிக்கலாம். எனவே, இயன்றவரை அதைத் தவிர்ப்பது நலம்.

உணவு, மருந்து சாப்பிட்ட உடனே படுப்பது தவறு. நிற்பது, உட்காருவது, நின்ற நிலையில் வேலை செய்வது செரிமானத்துக்கு நல்லது. பல் தேய்த்த உடனே சூடான அல்லது சில்லென்ற உணவு அல்லது தண்ணீரைக் குடிக்கக் கூடாது. பல் கூச்சம் ஏற்படலாம். தினமும் ஐந்தாறு முறை கோப்பி அல்லதுரீ குடிப்பது தவறு. ஒருமுறை குடிப்பதோடு நிறுத்திக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

24.02.2016 ~01.03.2016

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்**



கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். வாழ்க்கைத் துணைவர் உங்களின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி செய்வீர்கள். பணவரவில் திருப்திகரமான நிலை உண்டு. பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகைகளை பெறுவர். உறவினர்கள் வருகையால் பெண்கள் மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் தரத் தேர்ச்சி பெறுவர்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

**ரிஷபம்**



உறவினர்கள் ஒற்றுமையுடன் நடந்து கொள்வர். வாகனத்தில் செல்லும் போது கவனம். புத்திரர்களை வழி நடத்த இதமான அணுகுமுறை வேண்டும். நிறைந்த பணவரவால் சேமிப்பு கூடும். உடல்நிலை பலம் பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை ஓரளவு அதிகரிக்கும். அரசு சார்ந்த உதவி பெறுவீர்கள். ட ணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு, பணவரவு கூடும்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

**மிதுனம்**



குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலர் வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்கள் உங்களிடம் நண்பரைப் போல் சுமுகமாக நடந்து கொள்வர். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். பெண்களுக்கு இருந்த நீண்டநாள் கவலை நீங்கி சந்தோஷம் பெறுவர். மாணவர்கள் சிறப்பாகப் படித்து தேர்வுகளை நல்ல முறையில் எழுத தயாராவர்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்**



போக்குவரத்தில் மிகவும் கவனமாக இருக்கவும். புத்திரர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றக் கோரி பிடிவாதம் செய்வர். தொழில், வியாபாரம் செழித்து வளர கடின உழைப்பு உதவும். பெண்களுக்கு உறவினர்களால் சிறு பிரச்னை வரலாம். மாணவர்கள் புதியவர்களை நண்பர்களாக ஏற்பதில் கவனம் வேண்டும்.

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சிம்மம்**



தம்பி, தங்கைகள் உங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பர். சிலர் வீடு, பணியிடம் மாறும் சூழல் ஏற்படலாம். புத்திரர்களின் அறிவாற்றல் வியப்பையும், மகிழ்ச்சியையும் தரும். வேண்டாதவர்களால் உருவான கெடு செயல் பலமிழக்கும். மனைவியிடம் வாக்குவாதம் வேண்டாம். பணியாளர்கள் வேலைப்பளுவால் சிரமப்படுவர். பெண்கள், உறவினர் குடும்பத்தில் மங்கள நிழ்ச்சி நடத்த உதவுவர்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

**கன்னி**



நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி ஓரளவு கிடைக்கும். பொது இடங்களில் எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். வெகுநாள் பிரச்னைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் வளரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை தவறாமல் பின்பற்றவும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

**துலாம்**



மதிநுட்பத் திறமையினால், பணிகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் சுமுகமாக நடந்து கொள்வர். மருத்துவச் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. மனைவியின் நல்ல கருத்துக்கு மதிப்பளித்தால், குடும்பத்தில் ஒற்றுமை வளரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழித்து லாபம் பெருகும். பெண்கள், தாய்வீட்டு உதவி கிடைத்து மகிழ்ச்சி அடைவர்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்**



உறவினர்கள் தரும் ஆதரவு மனதிற்கு ஊக்கம் தரும். வாகனங்களில் மிதவேகத்தில் செல்வது பிரச்னைகளைத் தவிர்க்கும். . எதிரிகளால் வருகிற கெடுசெயலை முறியடிக்க சிரமப்பட வேண்டியிருக்கும். மனைவி சொல்லும் ஆலோசனையை பின்பற்றினால், குடும்பத்திற்கு நன்மை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் இருக்கும். பணியாளர்கள் வேலைப்பளுவால் சிரமப்பட நேரிடலாம்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு**



மனதில் உருவான திட்டத்தை செயல்படுத்த, புதிய வாய்ப்பு வரும். பணிகளில் ஒருமுகத்தன்மையுடன் ஈடுபடுவீர்கள். மனைவி இணக்கமுடன் நடந்து கொள்வார். உறவினர்களின் வருகை வீட்டில் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் உற்சாகமாக பணிபுரிந்து, நிர்வாகத்திடம் பாராட்டு பெறுவர்.

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

**மகரம்**



முக்கியமான பணி சிறப்பாக நிறைவேறும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி கூடும். வீடு, வாகனங்களைப் பாதுகாப்பதில் கவனம் வேண்டும். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள். மனைவி இன்ப, துன்பத்தில் பங்கு கொண்டு ஆறுதல் அளிப்பார். சுற்றுலா பயணத்திட்டம் நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து, தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் குடும்ப நலன் சிறக்க உரிய திட்டங்களை தீட்டுவர்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

**கும்பம்**



வித்தியாசமான அனுபவம் கிடைக்கும். பணிகளை நிறைவேற்ற ஆர்வமுடன் செயல்படுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உடல்நிலையில் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதிய அணுகுமுறையை பின்பற்றுவீர்கள். பணியாளர்கள் ஓரளவு சலுகை பெறுவர்.

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்**



சுய திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். வாகன பராமரிப்பு செலவு, முன்பை விட குறையும். உடல்நிலையில் கவனம் வேண்டும். மனைவி விரும்பிக்கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு கூடும். பணியாளர்கள், அதிக வேலைப்பளுவையும் திறம்பட சமாளிப்பர். பெண்கள், ஆன்மிக சுற்றுலா சென்று வர வாய்ப்புண்டு.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

**124**



ஆகவே தலைமறைவாக காட்டுக் கொரில்லா போரில் ஈடுபடுவதைக் காட்டிலும் மக்கள் மத்தியில் பணிபுரிந்தால் போராட்டத்துக்கு கூடுதலான பங்களிப்பவர்களாக இருப்போம். அதைவிட கிரமமாக இன்சுலின் மருந்து பெறவேண்டும் என்ற கவலையும் புறக்கணிக்கத்தக்க கூடிதொன்றல்ல. காட்டுப் பகுதியில் நாம் வாழ்ந்தால் இன்சுலினைக் கிரமமாகப் பெறுவோம் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை. இந்தக் காரணங்களை எல்லாம் ஒரு புறம் ஒதுக்கினாலும் எமது விருப்பமும் வேணாவும் மக்கள் மத்தியில் வாழ வேண்டும் என்பதேயாகும். அத்தோடு வடமராட்சியில் தலைமறைவு வாழ்க்கை வாழ எம்மால் இயலும் என்றும் கருதினோம். இனி, போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் பாலாவுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. இந்திய இராணுவத்துடன் போர் நிறுத்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துமாறு பிரபாகரன் தம்மை அனுப்பி வைப்பார் என்று பாலா கருதினார். ஆனால் இந்தியர் தமது இராணுவ முயற்சியை இடைநிறுத்த விரும்பவில்லை. பவான் போர் நடவடிக்கையானது பிரபாகரன் அவர்களையே இலக்கு வைத்துத் தொடக்கப்பட்டது. இதனால் அவர் தீபகற்பத்தை விட்டு வெளியேறி வன்னிக்காட்டின் மையப்பகுதியை அடைந்திருந்தார். அங்கேயிருந்து தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நின்ற இராணுவத்துக்கு எதிராக , காட்டுப்புற கெரில்லாப் போர் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

### இந்திய இராணுவத்தின் வேட்டை

இந்திய -புலிகள் யுத்தம் தொடங்கிய காலத்தில் , இன்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதியாக பணியாற்றும் கேணல் சூசை அன்று வடமராட்சிப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக இருந்தார். அவர் அடிக்கடி எமது வீட்டுக்கு வந்து செல்வார். வடமராட்சியில் எமது பாதுகாப்புக்கு அவரே பொறுப்பாகவும் இருந்தார். யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் நிகழும் இராணுவ நடவடிக்கைகள் பற்றியும் வடமராட்சி நோக்கி இந்தியப் படைகள் நகர்வது பற்றியும் சூசையே பாலாவுக்கு கிரமமாக அறிவித்து வந்தார். வடமராட்சிப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் படைபலம் எத்தகையது, இந்திய இராணுவத்தை எதிர்த்து நிற்க எவ்வகையான தற்காப்புப் போர் வடிவத்தை வகுக்க வேண்டும் என்பவை தொடர்பாக இரண்டு பேரும் கலந்துரையாடுவார்கள். விடுதலைப்புலிகளிடம் ஆளணிப்பற்றாக்குறையும் , ஆயுதப் பற்றாக்குறையும் இருப்பதால் முன்னேறி வரும் இந்தியப் படைகளுக்கு எதிராக,பகிரங்கமான மரபுவழிப்போரை நடத்துவது அர்த்தமற்றது என்றும், இதனால் புலிகளுக்கு மோசமான உயிரிழப்புக்கள் ஏற்படலாம் என்றும் பாலா வாதாடினார்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலிக் குழந்தை



அரசர் ஒருவருக்குத் திடீரென்று ஒரு நாள், தன் பட்டத்து யானை எவ்வளவு எடை இருக்கும் என்று அறிய ஆவல் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் எடை மேடைகள் எல்லாம் இல்லை. யானையை அளக்கும் அளவுக்குப் பெரிய தராசும் கிடையாது.

யானையின் எடையை எப்படி அறிவது? என்று அமைச்சர்களிடம் கேட்டார் மன்னர். யாருக்கும் அதற்கான வழி தெரியவில்லை. அப்போது அமைச்சர் ஒருவரின் பத்து வயது மகன், நான் இதன் எடையைச் சரியாகக் கணித்துச் சொல்கிறேன் என்றான். அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். ஆனால், அவனுக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்தார் மன்னர்.

அந்தச் சிறுவன், யானையை ஒரு நதிக்கு அழைத்துச் சென்றான். அங்கே இருந்த மிகப் பெரிய படகில் யானையை ஏற்றினான். யானை ஏறியதும், தண்ணீரில் ஆழ்ந்தது படகு. உடனே அவன், தண்ணீர் நனைத்த மட்டத்தைப் படகில் குறியீடு செய்தான். பிறகு, யானையைப் படகிலிருந்து இறக்கி, பெரிய பெரிய கற்களைப் படகில் ஏற்றச் சொன்னான். முன்பு குறித்து வைத்திருந்த குறியீடு அளவுக்குப் படகு தண்ணீரில் மூழ்கும் வரை, கற்கள் ஏற்றப்பட்டன. பின்பு, அரசரிடம் அந்தக் கற்களைக் காட்டி, "அவற்றின் எடைதான் அந்த யானையின் எடை" என்றான். அனைவரும் வியந்தனர்.

அவனது புத்திசாலித்தனத்தைப் போற்றிப் புகழ்ந்தனர்.

எல்லோரும் யானையை ஒட்டுமொத்த உருவமாகத்தான் பார்த்தார்கள். ஆகவே, அவர்களால் அதன் எடையைக் கணிக்கமுடியும் எனும் நம்பிக்கை வரவில்லை. ஆனால் அந்தச் சிறுவனோ, பல எடைகளின் கூட்டுத்தொகையே யானையின் எடை என்று எண்ணிச் செயல்பட்டான்; எளிதில் விடை கண்டான்.

- கணேஷ் அரவிந்த்

**இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்**





# சிறுவர் உலகம்

## வா வா வா



தோட்டத்தில் உள்ள புற்களே
சோகமாய் இருப்பதேன் சொல்லுங்கள்.
தோட்டக்காரையா வந்தாரே - நாங்கள்
தொல்லை தருவதாய் சொன்னாரே.
புற்களே புற்களே நீங்கள் யார்?
அவர் ஏன் உன்னை வெறுக்கிறார்?
திருட்டுத்தனமாய் நாங்கள் வந்தோம்
தண்ணீர் உரம் திருடித் தின்றோம்
அய்யோ! அய்யோ! பேசாதீர்
என் தோட்டத்துக்கு வர மறுக்காதீர்.
தோப்பில் வளர நீ விடுவாயா?
தொல்லை தருவதாய் சொல்வாயா?
ஆடும் பசுவும் மேய்ந்திடவே
அழைக்கிறேன் உன்னை வா! வா! வா!

**சுரா**

## காலையிலும், மாலையிலும் அடிவானம் சிவப்பு நிறமாக தோற்றமளிக்க காரணம்?

**சூ**ரியன் நண்பகல் நேரத்தில் நாம் இருக்கும் இடத்துக்கு நேரே உள்ளது. அதன்போது ஒளியானது நேராக உள்ள (குறுகிய) வளிமண்டலப் பகுதியை கடந்து பூமிக்குள் வருகின்றது. ஆனால் காலையிலும், மாலையிலும் ஒளியானது நாம் இருக்கும் இடத்தை நீண்ட வளிமண்டம் ஊடாக வந்தடைகின்றது.

அது எப்படியெனில், சூரியக் கதிர்கள் நேராக வருவதற்குப் பதிலாக சரிவாக நாம் இருக்கும் பகுதிக்கு வந்து சேர்கின்றது. சரிவாக வருவதனால் வளிமண்டலப் பகுதியூடாக நீண்ட தூரம் பிரயாணம் செய்ய நேருகின்றது.

அதனால் சிவப்பு நிறக் கதிர்களும் வாயு மண்டலத்தில் நீலக் கதிர்களைப்போல் சிதறடிக்கப்பட்டு தெறிப்படைந்து அதன் கதிர்களும் வானத்தில் பரவுகின்றன. அதனால் அடிவானம் சிவப்பாக தோற்றமளிக்கின்றது. இதே நேரம் சூரியன் சுச்சமாக தோன்றும் இடங்களில் வானம் நீலமாக தெரியும்.



## உன்பெருமை

நிலவு வருது நிலவு வருது
நீல வானில் மிதந்து வருது
உலவும் அதன் முகத்திலே
கலையாய் இருக்கு ஒரு மச்சம்
பார்ப்போர் கண்கள் பரவசத்தில்
பரவும் சோதி முகத்தினிலே
தன்னிகரில்லா தண்ணிலவு
தன்னலமில்லா தகையழகு
ஊருக்கெல்லம் ஒளி கொடுக்கும்
உயர்ந்த திருவுளம் கொண்டதது
அம்புலி நீயோ இருக்குமிடம்
அறியோம் எங்கும் சுற்றிடுவாய்
குடிசைக்கிடையே பாய்ந்தொளியை
கூட்டி ஏழையை மகிழ்த்திடுவாய்
அம்மா நாடுவாள் உன் தயவை
அழும் குழந்தைக்கு சோறூட்ட
கவிஞர் ரசிப்பார் உன்னழகை
கருத்துடன் கவிதை தேரோட்ட
அல்லியும் மலர்ந்திடும்
உனைக்கண்டு
சொல்லி முடியுமோ உன் பெருமை

**சரஸ்வதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்பிரியன்

பாடசாலை விட்டு வந்த சுஜீவன் அறையின் மேசையில் கிடக்கும் கடிதத்தைப் பார்க்கி றான். இது அண்ணன் கையெழுத் தாச்சே என்று எதிர்பார்ப்பை வளர்த்தபடி அவசர அவசரமாக கடிதத்தை பிரித்துப் படிக்கிறான். படித்தவன் கண்களில் நீர் வடிய மூலையில் சாய்கிறான். சுஜீவன் 12 வயசுச் சிறுவன். போரின் விளை வால் அனாதையாகி விட்டவன். உறவினரோடு தங்கித்தான் வாழ்கி றான். எதிர்காலம் என்பது அவனைப் பொறுத்தவரை நிச்சயமில்லா ததாகி விட்டது.

சசி சுஜீவனின் அண்ணன். அவர்கள் இருவருமே குடும்பத்தில் மிஞ்சி உள்ளனர். தாயும் தகப்ப னும் சில ஆண்டுகள் முன்னர், யாழ். குடாவில் கிளாலிக் கடற்பரப்பில் பயணிக்கும் போது, கடற்படை, பயணிகள் படகுமீது நடத்திய தாக்குதலில் படகோடு காணாமல் போனவர்கள் தான். இன்று வரை அவர்களின் கதி என்னவென்று யாருக்கும் தெரியாது. சசி கெட் டிக் காரன். இழப்புக்களைக் கண்டு துவண்டு விடாது உயர்தரம் படித்து பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகிப் போனான்.

சசியைப் பொறுத்தவரை அவன் பிறந்தது வளர்ந்தது எல்லாம் அவனின் சொந்த ஊரான ஒரு விவாசயக் கிராமத்தில் தான். தாயும் தகப்ப னும் ஆசிரியர்கள் என்றாலும் விவசாயத்தோடும் ஒன்றிப் போன தாலோ என்னவோ அவர்க ளுக்கு சொந்த ஊரை விட்டு வேறிடம் நகரப் பிடிக்கவில்லை. அப்போ அவர்களின் திட்டமெல்லாம் பிள் ளைகள் கஸ்டங்கள், நஸ்டங் கள், உறவுகள் என்று எல்லாம் அறிந்து வளர வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. அவர்களின் எதிர்பார் ப்பை பூர்த்தி செய்யத்தக்கதாகவே சசியும் உருவாகி இருந்தான். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவா கிக் கண்டிக்குப் போன போது தான் அவன் முதன்முதலாக புதிய சூழலுக்கும், புதிய மனிதர்களுக்கும், வேற்று மொழிக்கும் என்று புதியவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது.

அன்று பல்கலைக்கழகத்தில் முதல் நாள். வழக்கம் போல சாதா ரண உடையோடு எளிமையாக சசி தனது வகுப்பறை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். போகும் வழி யெங்கும் இளைஞர்களும் யுவதி களும் கூடிக்கூடி ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அவன் அவற் றை அவதானித்தபடி அவர்களைப் பொருட்படுத்தாது தனது முதல் வகுப்பு நோக்கி பல கனவுகளோடு நடந்து கொண்டிருந்தான். அப்போ யாரோ கைதட்டும் ஓசை கேட்டு திரும்பிப் பார்த்தான். ஒரு குழு அவனை தங்களிடம் வர அழைத்தது. சைகை மூலம் தனக்கு வகுப்பு என்று சொல்லி விட்டு சசி வகுப்பை நோக்கிச் சென்றான். வகுப்பு முடிந்து வெளி வரும் போது அதே குழாம் அவனை நெருங்கி வந்து 'அடேய் கூப்பிட் டோம் எல்லோ ஏன் வராமல் போனாய்' என்று மிரட்டலாக தமிழில் கேட்டனர். சசியும் பதிலுக்கு எனக்கு வகுப்புக்கு நேரமாச்சு அதுதான் சைகை காட்டிட்டுப் போனன் என்றான் துணிச்சலை வரவழைத்தப்படி. அதற்கு அவர்கள் என்ன எதிர்த்தா கதைக்கிறாய்... நாங்கள் உனக்கு 'சீனியேர்ஸ்...' எங்கள் உதவி இல்லாமல் நீ இங்கிருந்து வெளியேற முடியாது என்று மேலும் மிரட்டினர். அதைக் கேட்ட சசி கொஞ்சம் திக்குமுக்காடித்தான் போனான். இப்ப என்ன கேட்கிறீங்கள் என்று அப்பாவித்தனமாகக் கேட்டான். உன்னை ஒன்றும் கேட்கவில்லை. பின்னேரம் விடுதிக்கு வா என்றனர் அவர்கள். வராமல் விட்டா நடக்கிறதே வேற" என்று போகும் போதும் மிரட்டி விட்டுச் சென்றனர்.

பின்னேரம் போல சசி தயங்கித் தயங்கி அவர்கள் சொன்ன விடுதிக்குச் சென்றான். அங்கு அவனைக் கண்ட அந்தக் கூட்டத்தினர் "வாடா என்ன சுணக்கம்" என்றனர். "சுணக்கம் இல்லை அண்ணா.. சொன்ன நேரத்துக்கு வந்திட்டன்.. ஏன் கூப்பிட்டீங்கள்" என்று அப்பாவித்தனமாக பதிலுக்கு வினவினான் சசி. "இதோடா ஏன் கூப்பிட்டமாம்...இங்க உனக்கு விருந்து வைக்கப் போறம் அதுதான் கூப்பிட்டம்" என்றனர் அவர்கள் நக்கலாக. அதைக் கேட்ட அவர்களின் பெண் நண்பிகள் வாய்விட்டு பெரிசாக சிரித்தனர். அவர்கள் தங்கள் ஆண் நண்பர்களை உற்சாகப்படுத்தும் விதமாக கூச்சலும் போட்டனர். இதையெல்லாம் அவதானித்த சசி இவர்கள் பகிடிவதைக்கு தன்னைப் பலியாக்கப் போகின்றனர் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு நடக்கிறது நடக்கட்டும் என்று துணிச்சலை வரவழைத்தப்படி. அவர்களை எதிர்கொண்டான். அவனுடைய அப்பாவித் தனத் தைக் கண்டுவிட்ட அந்த மாணவர் களும் மாணவிகளும் அவனை இலகுவில் விடுவதாகவும் இல்லை. ஆரம்பத்தில் பெயர் ஊர் என்று கேள்விகள் கேட்டு ஆரம்பிக்கப் பட்ட அவர்களின் அறிமுகப் பகிடிவதை ஆபாசம் கலந்து அக்கிரமாகத் தொடர்ந்தது. அது எல்லை மீறப் போகிறது என்பதை ஊகித்து அறிந்து கொண்ட சசி "இதுக்கு மேல என்னால் எதுவும் செய்ய ஏலாது.. செய்யுறதைச் செய்யுங்கோ" என்றான் துணிவோடு. "அடேய் நீயும் எங்கட ஊர் தான் நாங்களும் அதே ஊர் தான்... தனியாள் உனக்கே இந்தளவு திமிர் எண்டா எங்களுக்கு எவ்வளவு இருக்கும்" என்று அவர்கள் பதிலுக்கு அவனை மிரட்டியதுடன் நெருங்கி வந்து சட்டையை பிடித்து இழுத்து தள்ளிவிட்டனர்.

தரையில் விசையோடு விழுந்த சசி மூர்ச்சையுற்றான். அதைக் கண்டு அவர்கள் ஓட்டம் பிடித்தனர். சில மணி நேரத்தின் பின் கண் விழித்த சசி தான் வைத்தியசாலையில் இருப்பதை உணர்ந்தான். ஆனால் அவனால் பழைய நினைவுளை மீட்டிப் பார்க்க முடியவில்லை. தான் ஒரு புதிய உலகில் இருப்பது போல உணரத் தொடங்கி னான். தன்னிலை அறியாது தவித்தான். வைத்தியர்கள் வந்து அடிக்கடி பரி சோதித்து விட்டுச் சென்றனர். இறுதியில் அவன் மனநோய் மருத்துவமனைக்கு மாற் றப்பட பரிந்துரைக்கப்பட்டு அங்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டான். அங்கு இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் அவன் இன்னும் பழைய நிலைக்குத் திரும்பவில்லை. இருந்தாலும் தன் தம்பியை மட்டும் அப்பப்போ சிறிதளவு அவனால் நினைக்க முடிந்தது. அவனுக்காக இயலும் போதெல்லாம் ஓரிரு வரிகள் எழுதுவான். அப்படி இரண்டு வருடங்கள் எழுதிய அந்த வரிகளை தம்பிக்கு அனுப்ப முடிவு செய்தான். தாதிகளின் உதவியுடன் அதை தம்பிக்கு அனுப்பியும் வைத்தான்.

இரண்டு ஆண்டுகளாய் தன்னை விட்டுப் பிரிந்து விட்ட, தன் ஒரே ஆறுதல், சொந்த அண்ணனின் எழுத்துக்களை, வரிகளை கண்டுவிட்ட அந்தப் பிஞ்சு சுஜீவன் அண்ணனை நேரில் காண்பதற்காய் ஏங்கினான். வந்த கடிதம் தாங்கி வந்த பாச வரிகளை மீண்டும் மீண்டும் படித்துப் படித்து கண்ணீரால் அதை பூஜித்தான். அவன் படும் துன்பங்களை, தாங்கும் ஏக்கங்களை அண்ணனிடம் பகிர வழியின்றி மௌனியாக அழுவதை விட அவனுக்கு வேறேதும் செய்யத் தெரியவில்லை. அவன் சின்னவன். அவனின் ஆசைகள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க யார் இருக்கினம். அம்மாவா அப்பாவா யாருமே இல்லை. ஏக்கங்கள் மட்டுமே அவனோடு மிஞ்சி இருக்கிறது. ஏங்கியபடியே இயலாமையோடு வெற்றறையின் மூலைக்குள் கடிதத்தை அணைத்தபடி முடங்கிக் கொண்டான் சுஜீவன்.

அவனைப் பொறுத்தவரை அவனுக்குள் இவ்வளவு துன்பங் களையும் ஏக்கங்களையும் பரிசளித்தவர்கள் பெற்ற தண்டனை என்று ஏதுமில்லை. அதற் காய் அவனுக்கு கிடைத்த பரிகாரங்களோ... சமூகத்தில் அனாதை.. பரிதாபத்துக் குரிய வன் என்பவைதான். குற்றம் செய்யா மலே மூலைக்குள் முடங்கிவிட்டது சுஜீவன் மட்டுமல்ல. அவனைப் போன்று எத்தனையோ பிஞ்சுகள். அவர்களின் நியாயங்கள், எதிர்பார்ப்புக்கள், தீர்வுகள் இன்றி ஏக்கங்களோடு வெளிப்படாமலே ஊமைக் குரல்களாய் அடங்கிப் போயிருக்கின்றன. உலகில் யார் இருக்கிறார்? அவர்களுக்காய் நீதி கேட்க ?! ஊமைக் குரல்களாய் அடங்குதல் தான் அவர்கள் விதியோ அல்லது சதியோ ?! நாளை இந்தச் சுஜீவன் தன் விதியை சதியை வெல்வானா ?! எதிர்பார்ப்புகளோடு என் விழிகள் திறக்கின்றன...அப்போ மூலைக்குள் அடங்கியவன் நிச்சயமான தெம்போடு மற்றவர்களின் ஆதரவுக்கு இடங் கொடாது தானே எழுவதைக் கண்டேன்..அண்ணனுக்காய்..தனக்காய்..தன் போன்றோருக்காய்..என்பதாய் உணர்ந்தேன்.



# ஊமைக் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிக் கூண்டில்.....

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்பவர்கள் கைது செய்யப்படுவதும் தடுத்து வைக்கப்படுவதும், தண்டிக்கப்படுவதும் அப்படி ஒன்றும் உலக அதிசயமல்ல?

மஹிந்த, கோத்தா குழுவினரின் ஒரு வெள்ளோட்டம் தோல்வியில் முடிந்து விட்டது என்பது தான் இங்கு குறிப்பிடத்தக்க விடயம்.

பிரகீத் எக்கலிகொட காணாமற் போனமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர், போராடி பயங்கரவாதிகளிடமிருந்து காப்பாற்றியவர்கள் என்றும் அதனால் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் கோரியே ஞானசாரதேரர் நீதிமன்றத்தில் குழப்பங்களை மேற்கொண்டார். அவர் கைது செய்யப்பட்டால் மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதுடன் அவருக்காகப் போராட்டம் நடத்தியவர்கள் கூடக் கைது செய்யப்பட்ட போதும் மக்கள் திருப்பிக் கூடப் பார்க்கவில்லை.

மஹிந்த, கோத்தபாய ஆகியோர் கைது செய்யப்பட்டால் போரை வெற்றி கொண்ட நாயகர்களைக் கைது செய்து விட்டனர் எனக் கூறி பொதுபலசேன, சிஹெலராவய, ராவனபலய போன்ற அமைப்புக்கள் பெரும் போராட்டங்களை நடத்தி மக்களைக் கிளர்ந்து எழ வைக்க முடியும் என நம்பப்பட்டது.

அதிகப்படியான கிளர்ச்சிகள் மூலம் அரசாங்கத்தை ஆட்டம் காணவும், அடிபணியவும் வைக்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் வெள்ளோட்டமே தோல்வியில் முடிந்து விட்டது. எனினும் ரணில் விக்கிரமசிங்க ஒரு விடயத்தில் வெற்றி பெற்றுள்ளார். அதாவது மஞ்சள் அங்கிகளை அணிந்து கொண்டு விட்டால் எவரும் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்ற கருத்தை உடைத்து விட்டார்.

தட்டிக்கேட்கப்பட முடியாதவர்கள் குட்டிக் கூண்டில் போடப்படுக் கொட்டமடக்கப்படுவார்கள் என்பதற்கு இந்தக் கைதுகளும், விளக்கமறியல் நீடிப்புக்களும் ஒரு நல்ல ஆரம்பம் என்றே கருத முடியும்.

# மக்கள்...

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினம், மண் தினம் போன்றவற்றை உரிய முறையில் அறிவிக்கவில்லை போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கபட்டுள்ளன.

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வடமாகாண சபையில் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் செயற்படுவார்கள். முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என்ற செய்தி இறக்கை கட்டிப் பறந்தது. அவை எல்லாம் காற்றில் காணாமல் போன பின்னர், அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் சகல அரசியல் கட்சிகளும் இரண்டாகின. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை இரண்டாக்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் செல்லாக் காசாகின. அந்த வேலையை இன்றைய உறுப்பினர்கள் கச்சிதமாகச் செய்கின்றனர். அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிரான பிரேரணையில் உள்ள குற்றச்சாட்டுகள் வெளிவரும்போது உண்மை வெளிவரும்.

---

# டெங்குக் காய்ச்சலா.....

( 14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கால்கள் சில்லிட்ட போதும், உடல் மட்டும் வெப்பம் கொண்டிருக்கும். நெற்றியிலும், கைகால் விரல் முனைகளிலும் புள்ளி புள்ளியாக குருதிக் கசிவு (petechiae) ஏற்படும். சில சமயம், தோலில் தடிப்புகள் அல்லது சிறு கொப்புளங்கள் தோன்றும். கை கால்கள் நீலமாகக் கூடும். இதயத் துடிப்பு அதிகரித்து. ரத்த அழுத்தம் குறைந்துபோகும்.

45ஆவது நாளில்தான் பெரும் உயிர் இழப்பு நேருகிறது. ரத்த வாந்தி, கறுத்த நிறத்தில் மலபோக்கு, ஆழ்மயக்கநிலை மற்றும் உடன் தேறாத அதிர்வு நிலை ஆகியன கவலையளிக்கும் அறிகுறிகள். மூச்சுத் திணறல், உடல் நீலம் ஆதல், வலிப்புகள் ஆகியன இறுதிக் கட்டத்தில் காணப்படும்.

**சிகிச்சை :**

டெங்குவுக்கென தனிப்பட்ட சிகிச்சை எதுவும் இல்லை. ரத்தச் சுழற்சி துவண்டு விடாமல் இருக்குமளவு நீரை உள்ளே செலுத்த வேண்டும்.

காய்ச்சலைக் குறைக்க போதிய அளவு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குருதிக் கசிவு ஏற்பட வட்டணுக்கள் (platelets) குறைவதே காரணம் என்பதால், அவற்றை ஈடுசெய்ய ரத்தம் குறிப்பாக, வட்டணுக்கள் மட்டும் செலுத்த வேண்டியிருக்கும்.

வட்டணுக்கள் சாதாரணமாக 2.0 இலட்சம் முதல் 2.5 இலட்சம் மி.மீ3 என்ற அளவில் இருக்கும். அவை, ரத்தக் கசிவு உடலில் ஏற்படாமல் தடுப்பவை. அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறையும்போது குருதிக் கசிவு ஏற்படுகிறது. மருத்துவ ஆலோசனை கட்டாயம் தேவை

**ஆய்வுக்கூட சோதனைகள்:**

டெங்குவுக் கென உடலில் தோன்றும் காப்பு மூலங்களின் அளவுகளைக் (Igm Anti Body) கொண்டு, டெங்குதானா என உறுதி செய்யலாம். இது வழக்கமாக எல்லா காய்ச்சல் வந்தவர்களுக்கும் செய்வது தேவை இல்லை. பணம்தான் வீணாகச் செலவாகும்.

2) வட்டணுக்களின் எண்ணிக்கை: இது குறையும் போது, ரத்தம் செலுத்த வேண்டி இருக்கலாம்.

**தடுப்பு முறைகள்:**

டெங்குவுக்கென தடுப்பூசிகள் கண்டுபிடிக் கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. இதுவரை வெற்றி கிட்ட வில்லை.

நிச்சயமான ஒரே தடுப்புமுறை, கொசுக் களை ஒழிக்கும் முறையே. மழைநீரை யும், வீடுகளில் தேங்கும் நீரையும் அவ்வப்போது ஒழிப்பது மட்டுமே.

**அவசியமான அச்சுறுத்தல்:**

ஒருமுறை டெங்கினால் பாதிப்புற்ற பிறகு, தடுப்பாற்றல் அதிகரிக்கும். ஆனால், அடுத்த முறை 4 ஊன்நீர் வகைகளில் வேறொரு வகை, டெங்கு நுண்ணி தாக்கும்போது, உடற்காப்பு மூலம் விளைவிக்கும் செயல்களால் மட்டுமே பெரும் தீங்குகள் ஏற்படும்.

அதாவது, நம்மைக் காப்பதற்கென்று உள்ள காவல்துறை, வீட்டில் திருடன் நுழைந்ததற்காக வீட்டையே கொளுத்து வது போன்ற விளைவுகள் ஏற்படும். இந்த நிலை பெரும்பாலும் உடல் பலம் குறைவான குழந்தைகளில் அதாவது நோஞ்சான்களிடம் ஏற்படுவதில்லை. நல்ல திடகாத்திரமான குழந்தைகளே பாதிப்புறுகின்றன. எனவே, நடுத்தர மற்றும் உயர்மட்ட வசதி கொண்ட குடும்பத்தினர் டெங்கு' என்றால் அலறு வது நியாயம்தான்! ஆனால், கொசுக் களை ஒழிப்பது நாமும் பங்கேற்க வேண்டிய ஒரு பொது நல சேவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

சீனாவில் மா சே துங் ஆட்சி துவங் கியபோது கொசுக்கள், பூச்சிகள், எலிகள் இவற்றைக் கொல்வது நம் தலையாய கடமை என்றவுடன், மக்கள் வெளுத்து வாங்கியதில், சுற்றுச் சூழல் சமநிலை இழப்பே (Ecological imbalance) வந்து விட்டது என்கிறார்கள். அந்த அளவு இல்லா விட்டாலும், கொஞ்சமா வது நாம் செயல்படலாம்... என்ன சொல்கிறீர்கள்?...

---

# ரசிகர்களை.....

( 08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் உயிர்கொல்லி வைரஸ் பரவலைத் தடுக்க காவல்துறை, ஊடகங்கள் அரசு ஆகியவற்றின் எதிர்வினை எப்படி இருக்கும் என்பதைப் படம் கண்டுகொள்ளவே இல்லை. ஒரே ஒரு காட்சியில் காவல்துறை உயரதிகாரி 'தலைநகரத்திலிருந்து சுடுவதற்கான அனுமதி கிடைத்துவிட்டது' என்று சொல்வது டன் காவல்துறை மற்றும் அரசின் பங்கு முடிந்துவிடுகிறது. அதன்பிறகு நாயகன்தான் அனைத்தையும் பார்த்துக்கொள்கிறார். ஒரு போக்குவரத்துக் காவலரான நாயகனிடம் எப்படி அத்தனை துப்பாக்கிகளும் (ஸ்னைப் பர்கள் உட்பட) தோட்டாக்களும் இருக்கின் றன என்ற கேள்விக்கும் எந்த பதிலும் இல்லை.

படத்தில் 'ஜாம்பிகள்', தண்ணீரைக் கண்டு பயப்படுவார்கள் என்று ஒரு விஷயம் வருகிறது. அப்படி இருக்க அவர்களை தண்ணீரைப் பயன்படுத்தி கட்டுக்குள் வைக்க முயலாமல் வைரஸ் தாக்கிய அனைவரையும் சுட்டு வீழ்த்துவது சற்று நெருடலாக இருக்கிறது.

'தனி ஒருவன்', 'பூலோகம்' என அடுத்தடுத்து இரண்டு படங்களில் வெளிப்பட்ட ஜெயம் ரவியின் அசாத்திய நடிப்புத் திறமைக்கு இந்தப் படத்தின் கடைசி அரை மணி நேரங்களில் மட்டுமே தீனி கிடைத்திருக்கிறது. அந்தக் காட்சிகளை தோளில் சுமந்து ரசிக்க வைக்கும் பணியை சரியாகச் செய்திருக்கிறார் அவர்.


லட்சுமி மேனன், பாத்திரத்துக்குத் தேவையான நடிப்பை வழங்கியிருக்கிறார். ஆனால் அவருக்குப் பின்னணி பேசியிருப்பவரின் குரல் பொருத்தமாக இல்லை. ரவியின் தங்கையாக நடித்திருக்கும் அனைகா இறுதிக் காட்சிகளில் மனதைத் தொடும் நடிப்பை வழங்கியிருக்கிறார்.

ரவியின் நண்பராக வரும் காளி வெங்கட் ஒரு சில இடங்களில் சிரிக்கவைக்கிறார். ஆர்.என்.ஆர். மனோகர் காமெடி கலந்த மாறுபட்ட வேடத்தில் கவனம் ஈர்க்கிறார். ஜாம்பி வைரஸ் தாக்கி பரிதாபமாக உயிரிழக்கும் காவலராக நடித்திருக்கும் இளைஞரும், தலைமை மருத்துவராக நடித்திருப்பவரும், நாயகிக்கு நிச்சயிக்கப்பட்டவராக வரும் அமித் பார்க்கவும் நன்றாக நடித்திருக்கிறார்கள். ஸ்ரீமன் வழக்கம் போல் கொஞ்சம் கடுப்பேற்றுகிறார். இந்தத் திறமையான நடிகரை ஒரே மாதிரியான நகைச்சுவைக் காட்சிகளில் தமிழ் சினிமா வீண்டிக்கிறதே என்று வருந்தாமல் இருக்க முடியவில்லை.

டி.இமானின் இரண்டு பாடல்கள் கேட்பதற்கு நன்றாக இருப்பதுடன் கதையின் சூழலுக்குப் பொருந்துகின்றன. ஆனால் பின்னணி இசையில் இரைச்சல் அதிகம். எஸ்.வெங்கடேஷின் ஒளிப்பதிவு ஊட்டியின் குளுமையை கண்ணுக்குக் கடத்துவதோடு பல ஆயிரம் பேர் இருக்கும் காட்சிகளை சரியாகக் கொண்டுவந்திருப்பதில் அவரது திறமையும் தொழில்நேர்த்தியும் பளிச்சிடுகிறது. படத்தொகுப்பாளர் கே.ஜே.வெங்கட் ரமணன் படத்தொகுப்பில் முதல் பாதியில் சில காட்சிகளுக்குக் கத்திரி போட்டிருக்கலாம். சண்டைப் பயிற்சியாளர் கணேஷ் ஒரு சிறப்புப் பாராட்டுக்குரியவர். க்ளைமாக்ஸ் காட்சியில் அவரது பங்கு மிக முக்கியமானது.

கடைசி அரைமணி நேரக் காட்சிகளும் அந்தக் காட்சிகளில் வெளிப்படும், ஜெயம் ரவியின் சிறந்த நடிப்பு மற்றும் படக்குழுவின் அபாரமான உழைப்பு ஆகியவற்றால் காப்பாற்றப்படுகிறான் இந்த மிருதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அடுத்த 100 ஆண்டுகளில் வாழ்க்கை முறை எப்படி இருக்கும்?




அடுத்த 100 ஆண்டுகளில் மனிதர்களின் வாழ்க்கை முறை எப்படி இருக்கும் என அறிவியல் ஆய்வாளர்கள் சுவாரசிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

அடுத்த 100 ஆண்டுகளில் நமது வாழ்க்கை முறை முற்றிலும் மாறும் எனத் தெரிவித்துள்ள அறிவியல் ஆய்வாளர்கள்.

நமது குடியிருப்புகளும், உணவும், தினசரி வாழ்க்கை முறையிலும் மாற்றம் ஏற்படும் என்றுள்ளனர்.

கடலுக்கடியில் குடியிருப்புகள் அமையலாம் என தெரிவித்துள்ள ஆய்வாளர்கள். வருங்காலங்களில் ஜனநெருக்கடியில் இருந்து தப்பிக்க இதுவே முறை எனவும் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவின் லண்டன் போன்ற பெருநகரங்களில் உலக மக்கள் தொகை



பெருக்கத்திற்கேற்ப சனத்தொகை அதிகரிக்கலாம்.

அதுபோன்ற காலகட்டங்களில் பொதுமக்கள் குடியிருப்பு சிக்கலாக மாறும் என கூறும் ஆய்வாளர்கள் இதுபோன்ற திட்டங்கள் எதிர்காலத்தில் பயனைத் தரலாம் என்றுள்ளனர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அஸ்திரேலியாவில் கரை ஒதுங்கிய விலாங்கு மீன்...



ஆஸ்திரேலியாவின் 'ஸ்வான்சீ' கடற்கரையில் ஈட்டி விலாங்கு மீன் என அழைக்கப்படும் ஈல் மீன் ஒன்று 'ஸ்வான்சீ' படகுத்துறையில் கரை ஒதுங்கியது.
இந்த விசித்திரமான மிகப்பெரிய 1.4 மீற்றர் நீளம் கொண்டது.


## 12 மாத நிலையான வைப்பிற்கு அதிகூடிய வட்டி சம்பத் வங்கியிடமிருந்து

8.5%

(A.E.R. 8.5%)

உங்கள் சௌகரியம் கருதி வருடத்தின் 365 நாட்களும் திறந்திருக்கும் சம்பத் வங்கியின் 12 சுப்பர் கிளைகள் உள்ளிட்ட நாடெங்கிலுமுள்ள 225 கிளைகள் உங்களுக்கு சேவை வழங்க காத்திருக்கின்றன.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Like us on facebook.com/Sampathbankplc

Sampath Bank Fitch Ratings A+(lka) | 0112 30 30 50 | www.sampath.lk



www.sdb.lk

நிலையான வைப்புகளுக்கு
## உயர்ந்த வட்டி

ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
**10.75%** உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)
வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வீ.) | 8.00% | 8.50% | 9.25% |
| வ.தே.வ. | 8.24% | 8.68% | 9.25% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ.1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.

**ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்**

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்

011 5 411 411

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி



MITSUBISHI ELECTRIC
AIR CONDITIONING SYSTEMS

eco changes

Mitsubishi Electric Quality

## 35 வருடங்களுக்கு மேலாக நம்பகமான மிட்சுபிசி மின் சாதனங்களுக்கான பிரத்தியேக முகவர் அபான்ஸ் மாத்திரமே..!

தரம், நீடித்த தன்மை மற்றும் செயல்திறன் போன்றவற்றிற்கான உத்தரவாதத்துடன் நம்பகமானதும், பரீட்சிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டதுமான மிட்சுபிசி மின் வளிச்சீராக்கிகளுக்கான 35 வருடங்களுக்கு மேலான முகவராக அபான்ஸ் செயற்படுகின்றது. உங்களின் வீட்டு மற்றும் வியாபார ஸ்தலத்திற்கான வளிச்சீராக்கி தேவைகளுக்கான நம்பகமிக்க மிட்சுபிசி மின் சாதனங்களை எப்பொழுதும் அபான்ஸிடமிருந்தே பெற்றுக்கொள்ள முடியும்.

**ஒரு முறை மிட்சுபிசி மின் சாதனத்தை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர், அதன் பின் எப்பொழுதும் மிட்சுபிசியில் அபிமானமுடைய வாடிக்கையாளராக திகழ்வார்**

- தொழிற்சாலை பயிற்சிப்பெற்ற தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களால் பராமரிப்பு,சேவை மற்றும் பழுதுபார்க்கப்படும்
- வளிச்சீராக்கி முறைமைகளை செயற்படுத்துவதில் 35 வருடங்களுக்கு மேலான அனுபவம்
- நம்பகமான மிட்சுபிசி உதிரிப்பாகங்கள்
- முழுமையான அபான்ஸ் உத்தரவாதம்

ஸ்பிலிட் வளிச்சீராக்கி



(10000BTU - 24000BTU)
~~ரூ.97,999/-~~
87,550/- ரூபாவிலிருந்து

ஸ்பிலிட் வளிச்சீராக்கி



(10000BTU - 24000BTU)
~~ரூ.148,999/-~~
128,750/- ரூபாவிலிருந்து

மிட்சுபிசி இன்வேட்டர் வளிச்சீராக்கிகள்

60% வரை ஆற்றல் சேமிப்பு



சீலிங் கெசட்
- தன்னியக்க மீள் துவக்க செயல்பாடு
- வயர்களற்ற ரிமோட் கட்டுப்படுத்தி
- பரந்துப்பட்ட விதத்தில் வளி வெளியேற்றி
- இரைச்சலற்ற குளிரூட்டல் முறை
- தன்னியக்க காற்றாடி மூடுகை

PLY/SUY-P18BALCM
(18000 BTU)
அதிகபட்ச குழாய் நீளம் - 40m
~~ரூ.370,800/-~~
ரூ.308,999/-

PLY/SUY-P24BALCM
(24000 BTU)
அதிகபட்ச குழாய் நீளம்- 40m
~~ரூ.401,700/-~~
ரூ.319,300/-

PLY/SUY-P36BALCM
(35500 BTU)
அதிகபட்ச குழாய் நீளம்- 40m
~~ரூ.442,999/-~~
ரூ.391,400/-

PLY/SUY-P48BALCM
(48000 BTU)
அதிகபட்ச குழாய் நீளம்- 40m
~~ரூ.607,700/-~~
ரூ.535,600/-



ப்ளோர் ஸ்டேன்டிங்
- சிறுவர் பாதுகாப்பு லொக்
- இரைச்சலற்ற குளிரூட்டல் முறை

PS/PU4
(35500 BTU)
அதிகபட்ச குழாய் நீளம் - 40m
~~ரூ.467,200/-~~ ரூ.411,999/-

PS/PU6
(51500 BTU)
அதிகபட்ச குழாய் நீளம் - 50m
~~ரூ.514,999/-~~ ரூ.489,250/-

சீலிங் சஸ்பென்டட்
- தன்னியக்க மீள் துவக்க செயல்பாடு
- இரைச்சலற்ற குளிரூட்டல் முறை



PC/PU5
(41500 BTU)
அதிகபட்ச குழாய் நீளம் - 50m
~~ரூ.481,600/-~~ ரூ.437,750/-

PC/PU6
(51500 BTU)
அதிகபட்ச குழாய் நீளம்- 50m
~~ரூ.504,700/-~~ ரூ.463,500/-

PC/PU4
(35500 BTU)
அதிகபட்ச குழாய் நீளம் - 40m
~~ரூ.355,400/-~~ ரூ.339,999/-

வளிச்சீராக்கிகளுக்கான 5M இலவசமாக பொருத்துதல்

சீலிங் கெசட்
- தன்னியக்க மீள் துவக்க செயல்பாடு
- இரைச்சலற்ற குளிரூட்டல் முறை



*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

PL/PU4
அதிகபட்ச குழாய் நீளம்- 40m
~~ரூ.360,500/-~~ ரூ.334,750/-

PL/PU6
அதிகபட்ச குழாய் நீளம் - 50m
~~ரூ.424,400/-~~ ரூ.391,400/-

அச்சுவேலி - 0779554229, சங்கானை - 0212250106, சாவகச்சேரி - 0212270005, சுன்னாகம் - 0242240440 / 0772208242, யாழ்ப்பாணம் "A" - 0212220981, யாழ்ப்பாணம் "B" - 0213202421, மானிப்பாய் - 0212255259, திருநெல்வேலி - 0212220247

HOTLINE 0714020800

us at www.facebook.com/abans

Abans



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2016 பெப்ரவரி 24ஆம் திகதி வெளியிடப்பட்டது.